பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி 19 சனிக்கிழமை 02.06.2018 | கதிர் 208

## கைபேசியை ஏமாற்றி அபகரித்தனர் இருவர்

**ஒருவர் பொலிஸில் சிக்கினார்**

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் இளைஞர் ஒருவரை ஏமாற்றிக் கைபேசியை அபகரித்துச் சென்ற இருவரில் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 12ஆம் திகதி

பக்கம் 14



# மைத்திரியின் கூற்று உண்மைக்கு முரண்

## நடந்தவை எல்லாம் அவருக்கு தெரியும் என்கிறார் சுமந்திரன்

கொழும்பு, ஜூன் 02

100 நாள் வேலைத்திட்டம் உட்பட அரசின் அனைத்துச் செயற்பாடுகளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்தாலோசித்தே நடைபெற்றன. தற்போது உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை அவர் கூறி வருகிறார்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

பக்கம் 14

## கிழக்கு ஆளுநரின் மனைவி-மகளுக்கு கைது உத்தரவு



கொழும்பு, ஜூன் 02

கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவின் மனைவியையும் மகளையும் கைது செய்துமன்றில்முற்படுத்துமாறு கொழும்பு பிரதம நீதிவான் நேற்றுக் கட்டளையிட்டார்.

நபர் ஒருவரைத் தாக்க முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் அவர்கள் இருவருக்கும் எதிராகப் பொலிஸார் முன்வைத்த குற்றச்சாட்டு அறிக்கை மீதே நீதிமன்று இந்த உத்தரவைப் பிறப்பித்தது. (ஐ)

### இது ரகசியம் அல்ல!

நல்லாட்சி அரசின் பதவிக்காலம் இன்னும் ஓரிரு தினங்கள்தான் என்கின்றன கொழும்பில் சில அரசியல் வட்டாரங்கள்.

நல்லாட்சி அரசின் பிரதான பங்குதாரர்களான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான முரண்பாடு

பக்கம் 03

## மாணவர் மீதான துஷ்பிரயோகங்களை தடுக்க அனைவரும் முன்வரவேண்டும்


**யாழ். அரச அதிபர் வேண்டுகோள்**

யாழ்ப்பாணம், ஜூன் 02

பாடசாலை மாணவர்களுக்கெதிரான துஷ்பிரயோக நடவடிக்கைகள் தொடர்பில் மாணவர்கள் முறைப்பாடு செய்ய முன்வர வேண்டும். அவ்வாறான சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளுக்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பக்கம் 14

## யமுனா ஏரியில் நேற்று இளைஞனின் சடலம்!



யாழ்ப்பாணம், ஜூன் 02

நல்லூர் யமுனா ஏரியில் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் கோவில் வீதியைச்

பக்கம் 14

## கோட்டாவின் வழக்கு 6 ஆம் திகதி விசாரணை

கொழும்பு, ஜூன் 02

அவன்கார்ட் வழக்கிலிருந்து, தாம் உள்ளிட்ட பிரதிவாதிகளைவிடுதலை செய்யுமாறு, முன்னாள் பாதுகாப்புச்செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்துள்ள மீள் பரிசீலனை மனு, எதிர்வரும் 6 ஆம் திகதி விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்படுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று நீதிபதிகளான குமுதினி விக்கிரமசிங்க மற்றும் ஜகத்

பக்கம் 14

## மஹிந்தவின் இப்தாரில் முஸ்லிம் அமைச்சர்கள்



கொழும்பு, ஜூன் 02

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு நேற்று முன் தினம் அவரது விஜயராம இல்லத்தில் நடைபெற்றது.

பக்கம் 14

## நயினாதீவு திருவிழாக்கு போதியளவு பஸ் சேவை



யாழ்ப்பாணம், ஜூன் 02

நயினாதீவுத் திருவிழா ஆரம்ப நாளான எதிர்வரும் 14 ஆம் திகதியில் இருந்து அதி

பக்கம் 14

## யாழ். இந்தியத் தூதரகம் முன் நேற்றுக் கவனவீர்ப்புப் போர்

**தூத்துக்குடிப் படுகொலைக்கு நீதிகேட்டு**




யாழ்ப்பாணம், ஜூன் 02

தூத்துக்குடி படுகொலைகளைக் கண்டித்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்க

பக்கம் 14

## தவறுகளை திருத்தியமைத்து பயணத்தைத் தொடருவோம்

**பிரதமர் ரணில் தெரிவிப்பு**



கொழும்பு, ஜூன் 02

நாட்டை கட்டியெழுப்புவது இலகுவான காரியமல்ல. எமது வேலைத் திட்டங்களில் ஒரு சில குறைப்பாடுகள்உள்ளன. எனினும் அவற்றைத் திருத்திக்கொண்டு நாம் பய

பக்கம் 14

## 100 நாள் வேலைத்திட்டம் தனி நபர் தயாரித்ததல்ல

**ஜயம்பதி விக்கிரமரத்ன விளக்கம்**

கொழும்பு, ஜூன் 02

100 நாள் வேலைத் திட்டம் ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவைப் பொது வேட்பாளராகக் களமிறக்கிய தரப்பினர் இணைந்து உருவாக்கியது எனவும், அது தனி நபர்

பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir



# பணம் பெற்ற எம்.பிக்களின் விவரம் கோரும் சபாநாயகர்

கொழும்பு, ஜூன் 02

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட 118 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விவரங்களைப் பெற்றுத் தருமாறு சபாநாயகர் கரு ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்குச் சபாநாயகர் கருஜயசூரிய எழுத்துமூல அறிவித்தல் விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் அல்லது அதற்கு நிகரான துணைபோகும் நிறுவனத்தினூடாகப் பணம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் தொடர்பான பட்டியலை வழங்குமாறு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை எழுத்துமூல கோரிக்கையை முன்வைத்துள்ளார் என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தயாசிறி ஜயசேகர வெளியிட்ட தகவலுக்கு அமைய, தற்போது அமைச்சர் சரத் பொன்சேகா தானும் பணம் பெற்றுக் கொண்டதை ஒப்புகொண்டமை பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நேவி சம்பத்தை தப்பிச் செல்ல உதவினாராம் அட்மிரல் ரவீந்திர

## அதனால் அவர் இப்போது சர்ச்சையில்

கொழும்பு, ஜூன் 02

2008ஆம் ஆண்டு, கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப் பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும். முக்கிய சந்தேகநபரான, கடற்படை அதிகாரி 'நேவி சம்பத்' நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு, கூட்டுப்படைகளின தளபதி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உடந்தையாக இருந்தார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டே நீதிவான் லங்கா ஜெயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, வழக்கை விசாரித்து வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால், நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.



அதில், இந்த வழக்கில் தேடப் பட்டு வரும் சந்தேகநபரான நேவி சம்பத் எனப்படும், லெப்டினன்ட் கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உதவியாகவும் உடந்தையாகவும் இருந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சந்தேகநபர் தப்பிச் செல்வதற்கு பொறுப்பாக இருந்த அனைவருக்கு எதிராகவும், தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிவான் லங்கா ஜெயரத்ன உத்தரவிட்டார்.

இந்த நிலையில், கூட்டுப்படை களின் தளபதியாக உள்ள அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, குற்றவாளியைத் தப்பிக்க உதவினார் என்ற குற்றச்சாட்டில் விசாரணைக்குட்படுத்தப்படலாம் அல்லது கைது செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மோட்டார் சைக்கிள்கள் திருட்டு: 2 பெண் உட்பட நால்வர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 02

முல்லைத்தீவுப் பகுதியில் மோட்டார் சைக்கிள்களைத் திருடி வந்த இரு பெண்கள் உள்ளிட்ட நான்கு பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் அண்மைக்காலமாக மோட்டர் சைக்கிள்கள் திருட்டுத் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் பல முறைப்பாடுகள் பதியப் பட்டிருந்தன.

இதற்கமைய குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்திய சோதனை நடவடிக்கையின்போது கரைச்சி குடியிருப்புப் பகுதியில் வைத்து சந்தேகநபர் ஒருவரையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றினர்.



இதன்போது கைதாகிய சந்தேக நபரிடம் விசாரணை மேற்கொண்டபோது பெரிய கொள்ளைச் சம்பவங்களில் திருட்டுகும்பல்ஒன்று செயற்பட்டு வருவது தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில் பொலிஸ் அணியினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தபோது முல்லைத்தீவு, கள்ளப்பாடுப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் மோட்டார் சைக்கிள்களின் பாகங்கள் மற்றும் இலக்கத் தகடுகளுடன் இரு பெண்கள் உள்ளிட்ட மூவர் கைதாகினர்.

இந்நிலையில் திருட்டில் ஈடுபட்டு வரும் கும்பல் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுத்து வருவதாக முல்லைத்தீவு பொலிஸார் கூறினர். (ஐ)

# விறகுடன் யாழ். வந்த மாணவனை காணோம்

கிளிநொச்சி, ஜூன் 02

கிளிநொச்சி– பூநகரிப் பகுதியிலிருந்து, யாழ்ப்பாணத்துக்கு விறகு கொண்டுச் சென்ற 17 வயது பாடசாலை மாணவனைக் காணவில்லை என பூநகரி மற்றும் யாழ். பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த மாணவன், கடந்த 29 ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளாரென முறைப்பாட்டில் கூறப் பட்டுள்ளது.

கிளிநொச்சி– பூநகரி 6 ஆம் மைல்கல் பகுதியைச் சேர்ந்த, சிவகுமார் ஜெயராஜ் என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.

இவர் பூநகரியிலிருந்து சைக்கிளில் விறகுக் கட்டுகளுடன் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# பஸ் நிலையத்தில் குழப்பம்

வவுனியா, ஜூன் 02

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்று முதல் இணைந்த பஸ் சேவையை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல் வடக்கு மாகாண சபையால் வழங்கப்பட்டது. இதனால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

நேற்று இணைந்த பஸ் சேவைக் காகத் தனியார் பஸ் சாரதிகள் சென்ற போது இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாரதிகளுடன் முரண்பாடு ஏற்பட்டது.

அத்துடன் இணைந்த சேவை மேற்கொள்வதிலும் குழப்ப நிலை ஏற்பட்டது. இணைந்த சேவையை மேற்கொள்ளுமாறு தமக்குத்



தலைமை அலுவலகத்திலிருந்து அறிவித்தல் வழங்கப்படவில்லை என இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாரதிகள் தெரிவித்தனர்.

இந்தக் குழப்பத்தால் தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாரதிகள் பஸ் நிலையத்தில் தரித்து பயணிகளை ஏற்றாமல் பஸ் நிலையம் முன்பாக பஸ்களை நிறுத்திப் பயணிகளை ஏற்றினர். (ஐ–100)



# யாழ். பொது நூலக எரிப்பின் 37ஆவது ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ். பொது நூலக எரிக்கப்பட்டு 37 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் பிரதம நூலகர் சுகந்தி சற்குணராஜா தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, யாழ்.நூலகம் எரிவதைக் கண்டு உயிரிழந்த அருட்தந்தை தாவீது அடிகளாரின் உருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து சுடரேற்றியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவஞ்சலி நிகழ்வில், யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் மற்றும் வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், வடமாகாண எதிர்க் கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா மற்றும் யாழ். பொதுநூலக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ–7)

# வவுனியா நகரசபைத் தலைவரை தாக்க முற்பட்டமைக்கு எதிர்ப்பு

வவுனியா, ஜூன் 02

வவுனியா நகரசபைத் தலைவரைச் சிறைக்காவலர் ஒருவர் அவமதித்ததுடன் தாக்க முற்பட்டமையைக் கண்டித்து நேற்று நகர சபைக்கு முன்பாக ஏ–9 வீதியில் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா நகரசபை தலைவர் இ. கௌதமன், செயலாளர் இ.தயாபரன் ஆகியோர் கடமை நிமித்தம் நகர சபை வாகனத்தில் நீதிமன்றத் துக்குப்பின்புறமாகசட்டத்தரணிகளுக் கான வாகனத்தரிப்பிடம் அமைப்பது தொடர்பில் ஆராயச்சென்றிருந்தனர். இதன்போது வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலைக் காவலர் ஒருவர் இவர்களுடன் முரண்பட்டதுடன் நகர சபைத் தலைவரைத் தாக்க முனைந்தார்.

இதனைக் கண்டித்தே நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.




வன்னிநாடாளுமன்றஉறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப்பினர்களான எம். தியாகராசா, ஆர். இந்திரராசா, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், செட்டிகுளம் பிரதேசசபை மற்றும் வவுனியா வடக்கு பிரதேசசபையின் உறுப்பினர்கள், வவுனியா வர்த்தகர் சங்கத்தினர், நகரசபை ஊழியர்கள், இலங்கை தேசிய பொது அரச ஊழியர் தொழிற் சங்கப் பிரதிநிதிகள், வவுனியா நகர சபை உத்தியோகத்தர் நலன்புரி சங்க பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் இதில் பங்கேற்றனர். (ஐ–100)






# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை: நேற்றைய கலந்துரையாடலில் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 2

'தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை – முழுமையான சட்டக் கொள்கை நிலைப்பாட்டை நோக்கி' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கலைப்பீட அறை இலக்கம் 207 இல் நடைபெற்றது.

அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம், சட்டத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சமகால சட்ட விடயங் களுக்கான அரங்கத் தோடு இணைந்துநடத்தப்பட்ட இக்கலந்து ரையாடலில் அண்மையில் 'அடையாளம்' இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கை யை ஒட்டி பிரதான உரையை அடையாளத் தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் யாழ் பல்கலைக் கழக சட்டத் துறைத்தலைவருமான குமாரவடிவேல் குருபரன் வழங்கினார்.

பிரதான பதிலுரையை அருட்பணி ம. சக்திவேல் 'அழைப்பாளர், அரசியல் கைதிகளின் விடுதலைக்கானதேசிய இயக்கம்' வழங்கினார். தொடர்ந்து கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெற்றது

## வவுனியாவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது



வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி பயணித்த பஸ்ஸில் கேரளா கஞ்சா கடத்தப்படுவதாக வவுனியா பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதன் அடிப்படையில் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் அந்த பஸ்ஸை பொலிஸார் சோதனையிட்ட சமயத்தில் 2 கிலோகிராம் கேரளக் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய மோகன்ராஜ் என்பவரைக் கைது செய்தனர்

## அலோஸியஸிடம் பணம் வாங்கிய 118 பேரினதும் பட்டியல் வெளியாகும்?

கொழும்பு, ஜூன் 2

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் இது வரை வெளிப்படுத்தப் படாத தகவல்களை வெளிப் படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ சட்டமாஅதிபர் ஜயந்த ஜயசூரியவிடம் ஆலோசனை கோரியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் இந்த ஆலோசனையை கடிதம் ஒன்றின் மூலம் சட்டமா அதிபரிடம் கோரியுள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி



மோசடி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அர்ஜுன் அலோஸியஸின் கம்பனியிடம் பணம் பெற்ற 118 பேர் தொடர்பில் தற்பொழுது அரசியல் களத்தில் அதிகம் பேசப்படுகின்றது. இவர்களின் பெயர்களை வெளியிடுமாறு அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது தெரிந்ததே.

# கடத்தப்பட்ட சிசுவை ஒப்படைக்கத் தயாராம்!

### தந்தை தரப்பிலிருந்து பொலிஸாருக்குத் தகவல்

வவுனியா, ஜூன் 02

வவுனியாவில் கடத்திச் செல்லப்பட்ட 8 மாதமேயான கைக் குழந்தைபத்திரமாக இருப்பதாகக் குழந்தையின் தந்தை பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

வவுனியா குட்சைட் வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் வீட்டிற்குள் புகுந்த மர்ம நபர்களினால் கடத்திச் செல்லப்பட்ட கைக்குழந்தை பத்திரமாக இருப்பதாக வவுனியா பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

வெளிநாட்டிலுள்ள குழந்தையின் தந்தை வவுனியா பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பை ஏற் படுத்தி கடத்திச் செல்லப்பட்ட கைக்குழந்தை பத்திரமாக இருப்பதாகவும் அதனை ஒப்படைப்பதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில், நேற்றுக் காலை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு குழந்தையின் தாயாருக்கு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டது. கடத்தப்பட்ட குழந்தையின் தாயார் மற்றும் உறவினர்கள் வவுனியா பொலிஸ்நிலையத்திற்குச் சென்று குழந் தையைப் பெற்றுக் கொள்வதற்காக நேற்றிரவு 7 மணி வரை காத்திருந்தனர். எனினும் குழந்தை பொலிஸ் நிலையத் துக்கு வந்து சேராமையால் அவர்கள் நேற்றிரவு ஏமாற்றத்துடன் பொலிஸ் நிலையத்த லிருந்து திரும்பினர்.

# காணமல்போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பு




காணாமல் போனோர் அலுவலகத்தைத் தாங்கள் எதிர்க்கின்றனர் எனவும் இவ்விடயத்தில் சர்வதேச விசாரணையே தமக்கு தேவை எனவும் முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடித் தொடர்ச்சியாக 450 ஆவது நாளாகவும் போராடி வரும் உறவுகள் தெரிவிக்கின்றனர். இன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் காணாமல்போனோர் அலுவலகம் தனது விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள நிலையில் காணாமல்போனோரின் உறவுகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அப்பட்டமாக வெளிப்பட்ட பின்னர் இந்த உறவு இன்னும் எத்தனை நாள்களுக்கு என்று கேள்வி எழுப்பப்பட்டு வந்தது.

இரண்டு கைகள் தட்டினால் தானே ஓசைவரும்! ஒரு கை தனியே விசுக்கினால் சத்தம் வராது அல்லவா?

அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்து விடயத்தைச் சமாளிக்கலாம் – காலத்தை இழுத்தடித்து – அரசைத் தொடரலாம் – என்று கணக்குப்போடுகின்றார் பிரதமர் ரணில்.

அதனால், சுதந்திரக் கட்சித் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்னவும் கூறிவிட்டுப் போகட்டும், நீங்கள் வாயைமூடிக் கொண்டு, அதற்குப் பிரதிபலிப்பு ஏதும் காட்டாமல் அமைதியாக இருங்கள் என்று தனது கட்சிக்காரர்களுக்குக் கண்டிப்பான உத்தரவு கொடுத்து விட்டார் பிரதமர் ரணில்.

ஆனாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ பொறுத்துப் போகின்றவராக இல்லை. நல்லாட்சி அரசிலிருந்து சு.கவினரை முற்றாக வெளியேறுமாறு அவர் உத்தரவிடத் தயாராகி விட்டார் என்று தெரிகின்றது.

சுதந்திரக் கட்சியின் மத்திய அரசியல் குழு நாளை கூடுகின்றது. நல்லாட்சி அரசிலிருந்து சு.க.முழுமையாக வெளியேற வேண்டும் என்று கோருகின்ற பிரேரணை ஒன்றை முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி. திஸநாயக்கா அங்கு கொண்டு வருகிறார்.

அந்தப் பிரேரணையை நிறைவேற்றுவதற்கான ஆதரவு சமிக்ஞையை அக்கூட்டத்தில் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காட்டுவார் எனத் தெரிகின்றது.

நாளைய கூட்டத்தில் சுதந்திரக் கட்சி அப்படி ஒரு தீர்மானத்தை எடுக்குமானால் நாளை மறுதினம் முதல் நல்லாட்சி அரசு, ஐ.தே.முன்னணி அரசாகக் குறுகிவிடும்.

அதன் பின்னர் அந்த அரசும் எவ்வளவு நாள்களுக்குத் தாக்குப் பிடித்து நீடிக்கும் என்பது கேள்விக் குறிதான்.

எனினும், தமிழ்க் கூட்டமைப்பின் 16 எம்.பிக்களினதும் ஆதரவை வைத்துக் கொண்டு அரசின் எஞ்சிய காலத்தைக் கொண்டிழுக்கலாம் என ஐ.தே.க. தலைமை கருதுவதாகத் தெரிகின்றது.

எது, எப்படியென்றாலும் நாளை பிறக்கப் போகின்ற புதிய வாரம் இலங்கை அரசியலில் பல புதிய பாதைகளுக்கு – கணக்குகளுக்கு – வழி திறந்து விடும் என எதிர்பார்க்கலாம் என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

-மின்னல்-

# கோண்டாவிலில் கல்விக்கான நிதி உதவி வழங்கும் நிகழ்வு







யாழ்ப்பாணம், ஜூன் 02

கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் கல்விக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் பா. கஜதீபன் கலந்து கொண்டார்

ஐக்கிய இராச்சிய கோண்டாவில் நலன்புரிச்சங்க நிதி அனுசரணையில், கோண்டாவில் மக்கள் நலன்பேணும் அமைப்பினால் முன்னெடுக்கப் பட்டு வரும் கல்விக்கான நிதியுதவி வழங்கும் செயற்றிட்டத்தின் மூன்றாம் கட்ட மாதாந்த நிதியுதவித்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான நிதியுதவிகளை வழங்கி வைத்தார். நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தா.தியாகமூர்த்தி, யாழ்.கல்விவலயஉதவிக் கல்விப் பணிப்பாளர் க.மாணிக்கராஜா, பேராசிரியர் சோ.தேவராஜா மற்றும் கோண்டாவில் மக்கள் நலன்பேணும் அமைப்பின் செயலாளர் செ.தனுஷன் ஆகியோர் பங்குபற்றினர். இந்நிகழ்வில் உதவி பெறும் மாணவர்கள் உட்பட்ப பலரும் கலந்துகொண்டனர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# பிணக்குப் பட இணக்கம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த சில நாள்களாகப் பகிரங்கமாக வெளியிட்டு வரும் அதிரடி அரசியல் கருத்துகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன.

ஏற்கனவே தனிப்பட்ட முறையில் தம்மைச் சந்திக்கும் சில தரப்புகளிடம் அண்மைக் காலமாகத் தமது அதிருப்தியை – மனக்குறைகளை – வெளியிட்டு வந்த ஜனாதிபதி இப்போது அவற்றைப் பகிரங்கமாகவே வெளியிட ஆரம்பித்து விட்டார்.

நல்லாட்சி அரசின் பிரதான பங்குதாரர்களான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கூட்டரசைத் தொடர்வது சம்பந்தமாகக் காணப்பட்ட இணக்கம் – தேனிலவு – முடிவுக்கு வருகின்றது என்பதும் –

இனிப் பிரிவினைக்கு – விவாகரத்துக்கு – உரிய முரண்பாடுகள் பகிரங்கமாக வெளிப்படத் தொடங்கும் என்பதும் –

துலாம்பரமாகி வருகின்றன.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால பகிரங்கமாகத் தெரிவித்த கருத்துகளுக்கு பகிரங்கப் பதிலடி தரவேண்டாம் என்று தனது ஐக்கிய தேசியக் கட்சியினருக்குக் கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ள நிலையில் பகிரங்க மோதல் – முரண்பாடு – கொஞ்சம் சூடு பிடிக்காமல் காலம் இழுபடக் கூடும்.

ஆனால், இரண்டு தரப்புகளுக்கும் இடையிலான 'தேனிலவு' முடிந்து விட்டது என்பது தெளிவானது.

இந்த ஜனாதிபதிப் பதவிக் காலம் முடிந்து, அடுத்த தடவையும் இப்பதவியில் கண்வைத்துக் காய் நகர்த்திய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அதில் வெற்றி வாய்ப்பு – சாத்திய நிலை கிட்டவில்லை என்று கூறப்படுகின்றது. அந்தப் பின்புலத்திலேயே நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சி மீது பாயத்தொடங்கியிருக்கின்றார் அவர்.

அடுத்த தடவை ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று விட்டது ஐ.தே கட்சி.

ஏற்கனவே சின்னா பின்னமாகிக் கிடக்கும் சுதந்திரக் கட்சியின் எஞ்சியோரும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பின்னால் அணி திரளத் தயாராகி விட்டனர்.

இந்தத் சூழலில் அடுத்த தடவை ஜனாதிபதிப் பதவி தமக்கு எட்டாக் கனி என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு புரியத் தொடங்கியிருக்கும். அதன் வெளிப்பாடே தற்போதைய பேச்சுகள் போலும்.

2015 ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன 9ஆம் திகதி மாலையிலேயே புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

ஆனால், 9 ஆம் திகதி முற்பகல் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையம் உத்தியோகபூர்வமாக வெளியிடுவதற்கு முன்னர், அன்று காலை புலரும்போதே அலரிமாளிகையை விட்டுப் புறப்பட்டு ஹெலிக்கொப்டரில் தங்காலை சென்றார் மஹிந்த ராஜபக்ஷ.

அந்த விடயத்தைக் இப்போது சர்ச்சையாக்குகின்றார் ஜனாதிபதி மைத்திரி.

அந்த ஹெலிக்கொப்டர் வசதியைச் செய்து கொடுத்தவர் ரணில் விக்கிரமசிங்க என்ற மாதிரியும் அதற்கும் தமக்கும் தொடர்பு ஏதுமில்லை என்பது போலவும் ஜனாதிபதி இப்போது கூறுகின்றார்.

ஆனால், அந்த ஹெலி சவாரியில் போனபோது மஹிந்த ராஜபக்ஷதான் இந்த நாட்டின் ஜனாதிபதி. அவருக்கு அப்படி ஹெலிக்கொப்டரைப் பயன்படுத்துவதற்கான அதிகாரம் சட்ட ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் இருந்தன.

தேர்தலில் தோற்ற மஹிந்த ராஜபக்ஷ பாதுகாப்பாகத் தங்காலைக்குச் செல்வதற்கு தாமே ஹெலி வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார் என 2015 ஏப்ரலில் மொனராகலை நடந்த பொதுக் கூட்டத்தில் தாம் பகிரங்கமாகக் கூறியமையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது தமக்கு வசதியாக மறந்து விட்டார் போலும்.

அப்படி ஹெலி பயன்படுத்தப்பட்ட சமயத்தில் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவர்தான். மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்க முன்னர் ரணில் பிரதமர் கதிரையில் அமர்வதோ, ஹெலி பாவனைக்கு உத்தியோகபூர்வமாக உத்தரவிடுவதே சாத்தியமற்றது.

அப்போது ஆக 47 எம்.பிக்களை மட்டும் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்து, நூறு நாள் வேலைத்திட்டத்தைத் தாமும் சேர்ந்து அங்கீகரித்து முன்னெடுத்து விட்டு, இப்போது அதையெல்லாம் கிண்டல்தனமாக பேசுவதைப் பார்க்கும்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்மைத் தாமே கிண்டல் செய்கின்றாரோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

எது எப்படி என்றாலும், ஜனாதிபதியும் பிரதமரும் அரசியல் பிணக்கில் சிக்கிக் கொள்ள இணங்கி விட்டார்கள் என்றே தோன்றுகின்றது.

# புத்தளம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வடக்கு அரசு சம்பளம் வழங்குவதா?

## சபையில் வெடித்தது சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 02

வடமேல் மாகாணத்தில் உள்ள 6 முன்பள்ளிகளில் கடமையாற்றும் 90 முஸ்லிம் ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாண சபை வழங்கி வரும் கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

1991 இல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீளக் குடியேற்றப்படும் வரையில் அவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் 122ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே முஸ்லிம் மக்களைப் பிரதிநிதுத்துவப் படுத்தும் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இந்த விவாதத்தால் சபை அமர்வில் சற்றுக் குழப்ப நிலை ஏற்பட்டது. உறுதியான தீர்மானம் எதுவும் இன்றி அது முடிவுக்கு வந்தது.

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வெளி மாகாணத்தை சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்கான அனுமதியை யார் வழங்கியது? இது சபையின் தீர்மானம் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதா? என முதலமைச்சரை நோக்கி எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கேள்வி எழுப்பினார்.

இதன்போது மேற்படி வினாவுக்கான பதிலை கல்வி அமைச்சரிடம் கேட்குமாறு முதலமைச்சர் கூறினார். கல்வி அமைச்சர் பதில் வழங்கினார். மேல்மாகாணத்தில் புத்தளத்தில் கடைமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாண சபையால் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. எனினும் இது எனக்கு ஆரம்பத்தில் தெரியாது. கடந்த சபை அமர்வின் போதே சம்பளம் வழங்கப்படுவது எனக்குத் தெரியும்.

முன்னைய கல்வி அமைச்சரும் அதிகாரிகளும் இது தொடர்பில் எனக்குத் தெரியப்படுத்தவில்லை. அதனால் தான் அது தொடர்பில் அறிந்து கொள்ள முடியவில்லை. எனினும் ஜூன் முதல் இவ்வாறு வழங்கப்படுகின்ற கொடுப்பனவை நிறுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் கடிதம் ஒன்று கடந்த 21 ஆம் திகதி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புத்தளத்தில் உள்ள 6 முன்பள்ளிகளைச் சேர்ந்த 90 ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாண சபை கொடுப்பனவு வழங்கி வருகின்றது.

இந்தக் கொடுப்பனவு 2011ஆம் ஆண்டில் இருந்து வடக்கு மாகாண சபையால் வழங்கப்படுகின்றது. இவ்வாறு கொடுப்பனவு வழங்கும் தீர்மானம் எம்மால் எடுக்கப்பட்டதல்ல. வடக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் உத்தரவின் பேரிலேயே வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் 3 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தற்போது 6ஆயிரம் ரூபா வரை யில் வழங்கப்படுகின்றது எனக் கல்வி அமைச்சர் பதிலளித்தார்.

இந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்குவழங்கப்படுகின்றகொடுப்பனவை நிறுத்த வேண்டும் என பிரேரணை ஒன்றும் கொண்டு வரப்பட்டது.

இதற்குச் சபையில் இருந்த முஸ்லிம் உறுப்பினர்களான அயூப் அஸ்மின், அலிகான் சரீப், அப்துல் நியாஸ் சீனி மொஹமட் ஆகியோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். வடக்குக்கு உரித்தான வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மீளக் குடியேற்றப்படும் வரையில் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை இடை நிறுத்தக்கூடாது. அவ்வாறு நிறுத்துவது மனிதாபிமானம் அல்ல. தமிழ் – முஸ்லீம் உறவை அது சீரளிக்கும்.

90 இல் நடைபெற்ற விடயங்கள் மீண்டும் பேசுபொருளாக நடைபெறுமளவிற்கு வந்து விடக்கூடாது என அஸ்மின் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இதனை அடுத்து முன்னைய கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் காலத்தில் மேல் மாகாணக் கல்வி அமைச்சருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் எட்டப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-7)

# போதைப்பொருள் தடுப்பு பற்றி ஆளுநர் தலைமையில் கூட்டம்



வடக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனை மற்றும் கடத்தல்களைக் கட்டுப்படுத்துவதில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்கள் தொடர்பாக ஆய்வு செய்யும் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் ஆளுநர் றெஜினோல்ட் குரே தலைமையில் நடைபெற்றது.

சர்வமதத் தலைவர்கள் ஆளுநரிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதில் சர்வமதத் தலைவர்கள், யாழ் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட், விசேட அதிரடிப்படை அதிகாரி, பொலிஸ் உயர் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பிரதேச செயலாளர்கள், மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அண்மைக் காலமாக மாணவர்கள் உட்பட பொது மக்கள் பலர் மத்தியிலும் அதிகரித்துள்ள போதை வஸ்துப் பாவனை மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும் என்று ஆளுநர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

இந்தச் செயற்பாட்டின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையைக் காலத்துக்குக் காலம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தார்.

மக்கள் மத்தியிலும் பாடசாலை மட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் பொலிஸார் துரித கதியில் செயற்பட்டுக் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்றும் அவர் பணித்தார். (ஐ)

# புதிய பிரதிச் சபாநாயகர் 5ஆம் திகதி நியமனம்

கொழும்பு, ஜூன் 02

பிரதிச் சபாநாயகர் பதவியிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமத்திபால விலகியதை அடுத்து. நாடாளுமன்றம் கூடவுள்ள எதிர்வரும் 5 ஆம் திகதி, அரசமைப்பின் 64 (3) உறுப்புரைக்கமைய, புதிய பிரதிச் சபாநாயகரைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென நாடாளுமன்றப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பதவிக்காக, எதிர்க் கட்சிகள் சார்பில் ஒருவரை நியமிப்பதற்கு, கூட்டு எதிரணியினர் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

இதற்காக, எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மக்கள் விடுதலை முன்னணியினருடன் கலந்துரையாடி தமது தீர்மானத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கான முயற்சியில், அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் கூறப்பட்டது.

எவ்வாறாயினும், எதிர்வரும் 5ஆம் திகதியன்று நாடாளுமன்றம் கூடியவுடன், முதல் நடவடிக்கையாக பிரதிச் சபாநாயகர் தெரிவாவார். இதற்கான வாக்கெடுப்பை, இரகசியமாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ)

### நாளை

03.06.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : உத்தராடம் மு.ப 10.49 வரை
திதி : பஞ்சமி பி.இ 4.56 வரை
சுபநேரம் : 8.52 – 10.22 வரை
இராகுகாலம் : 4.22 – 5.52 வரை

# கிழக்கில் எண்ணெய் ஆய்வுக்கு அமெ. நிறுவனத்துடன் உடன்பாடு

கொழும்பு, ஜுன் 02

இலங்கையின் கிழக்கு கடல் பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் இலங்கை அரசாங்கம் உடன்பாடு செய்துள்ளது.

உலகின் மிகப் பெரிய எண்ணெய் நிறுவனமான, Schlumberger என்ற அமெரிக்காவின் எண்ணெய் வயல் சேவைகள் நிறுவனத்தின் துணை நிறுவனமான Eastern Echo DMCC நிறுவனத்துடன் இது தொடர்பான உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் இந்த உடன்பாடு கையெழுத்திடப் பட்டுள்ளது.



நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு எண்ணெய் வளம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு, தரவுகளைத் திரட்டும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

கிழக்கு கடற்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட சில இடங்களில், இரு பரிமாண மற்றும் முப்பரி மாண ஆய்வுகளை மேற் கொண்டு தரவுகளைத் திரட்டுவதற்கு அமெரிக்க நிறுவனம் ஐந்து கோடி டொலர்களைச் செலவிடும்.

இலங்கை ஏற்கனவே கடந்த 2016ஆம் ஆண்டு கிழக்கு கடலில் எண்ணெய் வள ஆய்வுகளை மேற்கொள்வதற்கு Total என்ற பிரெஞ்சு நிறுவனத்துடன் உடன்பாடு செய்திருந்தது.

எனினும், இந்த ஆய்வுகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## கொழும்பு நகரின் புதிய வரைபடம் வெளியானது



கொழும்பு, ஜுன் 02

கொழும்பு நகரின் புதிய வரைபடம் நேற்று முன்தினம் நிலஅளவைத் திணைக்களத்தினால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் புதிய வரைபடத்தில், கொழும்புத் துறைமுக நகரம், அதிவேக நெடுஞ்சாலைகள், கொழும்பு நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று, நில அளவையாளர் நாயகம் உதயகாந்த தெரிவித்துள்ளார்.

புதிய வரைபடத்தின்படி, கொழும்பு நகரின் பரப்பளவு, 474.5 ஹெக்ரெயரினால் அதிகரித்துள்ளது.

இலங்கையின் புதிய வரைபடத்தைத் தயாரிக்கும் பணி, 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

மொத்தம், 92 பகுதிகளாக இந்த வரைபடம் தயாரிக்கப்படுகிறது. இதில், 72 பகுதிகளை வரையும் பணிகள் முடிந்து விட்டன.

எஞ்சிய பகுதிகள் நிறைவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள், இலங்கையின் முழுமையான வரைபடம் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## படைப் பல உறவில் அமெ. அதிக ஆர்வம்



கொழும்பு, ஜுன் 02

இலங்கைப்படைகளுடனான உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்வதில் அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளதாக, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எமது பாதுகாப்பு ஒத்துழைப்பை இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் நன்மையளிக்கும் வகையில், விரிவாக்கிக் கொள்வதை அமெரிக்க அரசு எதிர்பார்க்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 29ஆம், 30ஆம் நாள்களில், அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின், உறுப்பினர்கள்- ஆயுதப்படை சேவைகள் குழுவின் தலைவர் மக் தோன்பெரி தலைமையில், இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே அமெரிக்கத் தூதுவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

## லஸந்த படுகொலைச் சம்பவம்; சப் இன்ஸ்பெக்ரர் வாக்குமூலம்

கொழும்பு, ஜுன் 02

'தசண்டேலீடர்' ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் அதிகாரி, நேற்று நீதிமன்றத்தில் மூன்றரை மணி நேரம் இரகசிய வாக்குமூலம் வழங்கினார்.

கல்கிஸைப் பொலிஸ் நிலையத்தின் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரியாக இருந்த சப்இன்ஸ்பெக்ரர் திஸ்ஸ சிறி சுகதபால, நேற்றுமுன்தினம் மாலை கல்கிஸை நீதிமன்ற பிரதம நீதிவான் மொகமட் மிஹால் முன்னி லையில், நிறுத்தப்பட்டு இரகசிய வாக்குமூலம் அளித்தார்.

லஸந்த விக்ரமதுங்க கொலை வழக்கில் இரண்டாவது சந்தேக நபராக இவர் கைது செய்யப்பட் டிருந்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து கொண்டு வரப்பட்ட இவர், நீதிவான் முன்னிலையில் மூன்றரை மணி நேரம் வாக்குமூலம் வழங்கினார்.



லஸந்த விக்ரமதுங்க படுகொலை தொடர்பான தகவல்களை மறைத்தார் மற்றும் அழித்தார் என்ற குற்றச்சாட்டில், திஸ்ஸ சிறி சுகத பால கடந்த பெப்ரவரி மாதம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

## போத்தல ஜெயந்த மீதான தாக்குதல்:

# சிங்கள நாளிதழ் ஆசிரியர் விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, ஜுன் 02

ஊடகவியலாளர் போத்தல ஜெயந்த தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்காக, வருமாறு நாளிதழ் ஒன்றின் ஆசிரியருக்கு குற்றப் புலனாய்வுப்பிரிவு அழைப்பு விடுத்துள்ளது.

சிங்கள நாளிதழ் ஒன்றின் ஆசிரியரையே நேற்று வாக்கு மூலம் அளிக்க வருமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைத்துள்ளது.

2009ஆம் ஆண்டு ஊடகவியலாளர் போத்தல ஜெயந்த தாக்கப்பட்டிருந்தார். இதைய டுத்து, அவர் 2010ஆம் ஆண்டு நாட்டை விட்டு தப்பிச் சென்றார்.

கடந்த ஆண்டு நாடுதிரும்பிய போத்தல ஜெயந்த, தாம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் கோரியிருந்தார்.



இந்தச் சம்பவம் தொடர்பாக, நடத்தப்படும் விசாரணைகள் தமக்கு திருப்தி அளிக்கவில்லை என்றும், ஊடகவியலாளர் கீத் நொயார் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கும் தன் மீதான தாக்குதலுக்கும் தொடர்பிருக்கலாம் என்றும் போத்தல ஜெயந்த சந்தேகம் தெரிவித்திருந்தார்.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜுன் 02

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**யாழ் பிரதேசத்தில்** - விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## றமழான் சிந்தனை



எனது உம்மத்தினர் றமழான் மாதத்தை முடித்து ஈதுல் பித்ரை கொண்டாடும் நாளில் அல்லாஹுதஆலா அவர்களுக்கு வழங்கிய வெகுமதிகளைக் கண்டு மலக்குகள் மகிழ்ச்சியடைந்து சந்தோஷம் அடைகின்றனர் என நபி முஹமத் (ஸல்) கூறியுள்ளார்கள்.

நூல் - பைஹகி

| ஸஹர் | சுபஹ் |
| --- | --- |
| 4.17 | 4.32 |

மஃரிப் (நோன்பு திறக்கும் நேரம்) 6.24

# ஹெலியில் தங்காலை சென்ற போது தாமே ஜனாதிபதி என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜுன் 02

கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த பின்னர் தங்காலை செல்வதற்கு மஹிந்த ராஜபக்ஷக்குஒரு தனி உலங்கு வானூர்தி வழங்கப்பட்டிருந்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்துக்கு பதில் அளித்துள்ள மஹிந்த ராஜபக்ஷ, தான் தான் அப்போதும் ஜனாதிபதியாக இருந்தார் எனக் கூறியுள்ளார்.

நான் அறிந்தவரையில் தங்காலை சென்றபோது நான் தான் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட முன்னரே நான் புறப்பட்டுவிட்டேன். புதிய ஜனாதிபதி பதவி ஏற்கும் வரை முன்னைய ஜனாதிபதியின் கடமைகள் தொடரும். இதுதான் உண்மையாக நடந்தது. எனது பாதுகாப்பு அதிகாரிகளின் பொறுப்பாளர் பொலனறுவையை சேர்ந்தவர். அவரும் அங்கு சென்றார்.- என்று ஊடகவியலாளர்களுக்கு அவர் கூறினார். (உ)



# சூதாட்டத்தில் ஈடுபட்ட ஐந்து பெண்கள் கைது

கொழும்பு, ஜூன் 02

காலி- லென்தேவ பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 5 பெண்களும், மேலும் இரு ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

40-70 வயதுக்குட்பட்ட பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# கிளிநொச்சியில் சதுரங்கப் போட்டி 800 மாணவர்கள் பங்கேற்றனர்






கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தினரால் வருடாந்தம் நடத்தப்படும் மாவட்ட மட்டத்திலான மாபெரும் சதுரங்கப் போட்டிகள் கடந்த 26 ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெற்றன.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இப்போட்டிகள் 8வயது 10 வயது, 12 வயது ,14 வயது 16 வயது, 18 வயது, 20 வயது, 20 வயதிற்கு மேற்பட்டோர் என்ற வயதுப்பிரிவுகளில் ஆண், பெண் என தனித்தனிப் பிரிவுகளாக பதினாறு பிரிவுகளாக நடைபெற்றன.

இப்போட்டிகளில் கிளிநொச்சிமாவட்டத்தைச்சேர்ந்த எண்ணூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர்.

போட்டி முடிவில் கடந்த ஞாயிறன்று பரிசில் வழங்கல் நிகழ்வு நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டச் சதுரங்கச் சங்கத்தின் தலைவர் தி.சிவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் என். கௌரிதாசனும், சிறப்புவிருந்தினராக கிளிநொச்சி வலயத்தின் உடற்கல்வி பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.காந்தச்செல்வனும் கலந்து கொண்டனர்.

வெற்றியாளர்களில் 8 வயது, 10 வயது, 12 வயது பிரிவுகளில் முதலாம் இடம்பெற்றவருக்கு 2,500 ரூபாவும், 2 ஆம் இடம்பெற்றவருக்கு 1,500 ரூபாவும், 3 ஆம் இடம் பெற்றவருக்கு 1,000ரூபாவும்

ஏனைய வயதுப் பிரிவுகளில் முதலாம் இடம்பெற்றவருக்கு 5, 000 ரூபாவும் 2ஆம் இடம்பெற்றவருக்கு 3,000 ரூபாவும் 3 ஆம் இடம் பெற்றவருக்கு 2,000 ரூபாவும் பணப் பரிசில்களாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பதக்கங்கள், வெற்றிக்கிண்ணங்கள், வெற்றிச்சான்றிதழ்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

4 தொடக்கம் 10 வரையான இடங்களைப் பெற்றவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும், வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

போட்டியின் சகல சுற்றுக்களிலும் முழுமையாகப் பங்குபற்றிய அனைவருக்கும் பங்குபற்றுநர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (இ-70)

# தினசரி ராசி பலன் (02.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 19 ஆம் நாள் சனிக்கிழமை. சதுர்த்தித்திதி பி.இ.4.17 மணி வரை பின்னர் பஞ்சமி. நட்சத்திரம்: பூராடம் காலை 8.50 மணி வரை. பின்னர் உத்தராடம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 8.59 மணி முதல் 10.33 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 2.53 மணி முதல் 4.23 மணி வரை.

இன்று சங்கடகர சதுர்த்தி

**திவசம் செய்ய வேண்டிய திதி** - வைகாசி மாத தேய்பிறை சதுர்த்தி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - உத்தராடம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அன்பும், பண்பும் நிறைந்திருக்கும். வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி காணப்படும். செய்யும் தொழில் விருத்தி அடையும்.

**ரிஷபம்** யோசனையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். எநதப் பணியையும் பதற்றப்படாமல் நிதானமாக யோசித்துச் செய்ய வேண்டும். வியாபாரத்தில் நட்டம் உண்டாகும். சிலருக்கு செய்யும் தொழிலை இழக்க நேரிடும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். கடன் பளு ஏறும். தேகநிலையில் ரோகங்கள் உண்டாகும். வியாபாரம் ஏற்றமும், இறக்கமுமாக நடக்கும்.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். விட்டுப் பரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும். உத்தியோகத்தில் திறமையால் பதவி உயர்வு கிடைக்கும்.

**சிம்மம்** சுபீட்சமான நாள். பணம் பலவழிகளாலும் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும். சகோதர வழியால் நன்மைகள் கிடைக்கும்.

**கன்னி** சஞ்சலமான நாள். மனதில் குழப்பம் யோசனை உண்டாகும். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் தலைதூக்கும். வியாபாரம் மந்த நிலையில் இருக்கும்.

**துலாம்** மத்திமமான நாள். வரவும், செலவும் சமமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும். வியாபாரம் லாபமும், நட்டமுமாக நடக்கும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும்.

**விருச்சிகம்** இனிமையான நாள். பொருளாதாரம் மனநிறைவைத் தரும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். சிலர் நண்பர்களுடன் சேர்ந்து சுற்றுலாப் பயணம் மேற்கொள்வார்கள். மனம்போல் திருமணவாழ்வு அமையும்.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். வியாபாரம் துரித வளர்ச்சியடையும். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கௌரவப் பதவிகள் கிடைக்கும்.

**மகரம்** குழப்பமான நாள். மனதில் ஒருவித குழப்பம் உண்டாகும். திருமண காரியங்கள் இழுபறியில் இருக்கும். பண வரவு குறையும். குடும்பத்தில் அமைதி குன்றும். உறவினர்களுடன் வீண் பிரச்சினைகள் உண்டாகும்.

**கும்பம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் முன்னேற்றம் அடையும். மாணவர்கள் கல்வியில் ஆக்கபூர்வ முன்னேற்றம் அடைவார்கள்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தியடையும். குடும்பத்தில் அந்நியோன்யம் உண்டாகும். வியாபாரம் நல்ல அபிவிருத்தியடையும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் காட்டுவார்கள்.

**சந்திராஷ்டம நாள்: கார்த்திகை 2ஆம் 3 ஆம், 4ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# நூல் அறிமுக நிகழ்வு இன்று கிளிநொச்சியில்






இலங்கை இன முரண்பாட்டின் முழுமையான பரிமாணத்தைக் காட்டும், இன விடுதலைப் போரின் இன்னுமொரு பக்கத்தையும் சொல்லும் அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூலான ''வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை'' நூலின் அறிமுக நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி பழைய மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளரும், சமூகச் செயற்பாட்டாளரும் பாடசாலை அதிபருமான பெருமாள் கணேசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அறிமுகஉரையை மு.மயூரனும், நூல் விமர்சனத்தை அன்ரன் அன்பழகனும், ஏற்புரையை நூல் ஆசிரியரும், மூத்த இடது சாரிச் செயற்பாட்டாளருமான தோழர் சி.கா.செந்திவேலும் ஆற்றவுள்ளனர்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி சமூக மாற்றத்திற்கான நண்பர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்

வடமராட்சி, கரணவாய் தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த கந்தையா சற்குணம் சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பி.சிவகுமார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



இவர் வீரகேசரி, தினக்குரல் பத்திரிகையில் கொழும்புத் தலைமைக் காரியாலயத்தில் விளம்பரம் மற்றும் விநியோகப் பகுதிகளில் கடமையாற்றி, தினக்குரல் பத்திரிகையின் விநியோக முகாமையாளராக நியமனம் பெற்று, சிறந்த பணியாற்றி, தற்போது உதயன் குழுமத்தின் நெல்லியடி அலுவலகத்தில் பொறுப்பாளராகக் கடமை புரிகின்றார்.

கரணவாய் தெற்கு விபுலானந்தா சனசமூக நிலையம், முன்பள்ளி ஆகியவற்றின் முன்னாள் தலைவராகவும், தென்கருணையம்பதி முருகன் ஆலய முன்னாள் பொருளாளராகவும், சிவில் பாதுகாப்பு குழுத் தலைவராகவும், கிராமிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கான அபிவிருத்திக் குழுத் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார். (இ)

# பெரியபுலம் ம.வி. ஆண்டு விழாவும் பரிசில் தினமும்

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 195 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 'புல ஓசை' மலர் வெளியீடும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு –

பாடசாலை கனகசிங்கம் மண்டபத்தில் இரு அமர்வுகளாக அதிபர் ந. பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். பிற்பகல் 2 மணிக்கு பரிசு வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

காலை நிகழ்வுக்கு சிறப்பு விருந்திரனராக யாழ். மாநகர சபை உறுப்பினரும் பழைய மாணவருமான இ.கணேசராசாவும், மாலை நிகழ்வாக பரிசுத்தினம் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி மாலினி பேரம்பலம் (யாழ் போதனா வைத்தியசாலை), சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை பகுதித் தலைவர் திருமதி.த.சண்முகரட்ணமும் (பெரியபுலம் ம.வி.)கலந்து சிறப்பிக்க உள்ளனர். (இ

# ஐ.தே.கவை பாதுகாக்கும் நோக்கம் தமிழ்க் கூட்டமைப்புக்கு கிடையாது




கொழும்பு, ஜூன் 02

ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்கும் நோக்கம் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு இல்லை என்று இரா.சம்பந்தன் தெரிவித்தார் என எஸ்.பி. திசாநாயக்க எம்.பி. தெரிவித்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனை சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் 'குழு16' புதனன்று சந்தித்து உரையாடியமை தொடர்பாகவே எஸ்.பி. திசாநாயக்க இவ்வாறு கூறினார்.

அரசிலிருந்து வெளியேறிய 16 எம்.பிக்களதும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு 10 இல் நடைபெற்றது. இதன்போதே இரா.சம்பந்தனுடனான சந்திப்பு சாதகமாக அமைந்ததாக அவர் கூறினார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லையென்றும் அவ்வாறு மக்கள் நினைத்திருப்பார்களாயின் அது தவறு என்றும் சம்பந்தன் எம்.பி. 16 பேரிடமும் சுட்டிக்காட்டினார் எனவும் எஸ்.பி திசாநாயக்க தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு எட்டப்பட மாட்டாது என்றும் அவர் நம்பிக்கைக்குரியவரைப் போன்று செயற்பட்டாலும் உண்மையில் நம்பிக்கையை பாதுகாக்காதவரென்றும் 16 சு.க எம்.பிக்களும் இரா. சம்பந்தனிடம் கூறினர் எனவும் அவர் இச்செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2001 ஆம் ஆண்டு பிரபாகரனுடன் மேற்கொண்ட ஒப்பந்தம் மூலம் நாட்டை தட்டில் வைத்து பிரபாகரனிடம் ஒப்படைத்தார். அப்போது நான் விவசாய அமைச்சராக இருந்தேன். அக்கால கட்டத்தில் வடக்கு செல்வதற்கு எல்.ரீ.ரீ.ஈயினரின் பாதுகாப்பு தேவைப்பட்டது என சுட்டிக்காட்டிய திசாநாயக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தமிழர் பிரச்சினை ஒருபோதும் தீர்த்து வைக்கப்படாது என்றும் அவருக்கு அதற்கான தேவை இல்லையென்றும் இரா.சம்பந்தனிடம் விளக்கி கூறினார் எனவும் தெரிவித்தார்.

இதன்போது சம்பந்தன் எம்.பி, டட்லி சேனாநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் பிரதமர் ஆவதற்கும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கும் தமிழ் மக்கள் பெரும் ஒத்துழைப்பை வழங்கியமை போலவே இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கே ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர் என்று சு.க எம்.பிக்களிடம் கூறினாராம்.

இந்த நிலையில் தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்கின்றனர் எனக் கூறும் குற்றச்சாட்டு நியாயமற்றது என்றும் அனைத்து இன மக்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் கட்சிக்கே கூட்டமைப்பு எதிர்காலத்திலும் தனது ஆதரவை வழங்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தின் சிரேஷ்ட உறுப்பினர். அக்காலம் முதல் எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரனின் செயற்பாடுகளில் கடும் எதிர்ப்பைக் கொண்டிருப்பவர். நாடு இரண்டாகப் பிரிவதை ஒருபோதும் விரும்பாதவர். சிங்களவர்கள் மற்றும் பௌத்தர்களின் ஒத்துழைப்புடன் வேலை செய்ய விரும்புபவர். சம்பந்தன் எம்.பியினாலோ அல்லது தமிழ் தேசியக் கூட்டமைப்பினராலோ பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்படவில்லை.

சுதந்திரக் கட்சியிலுள்ள சில உறுப்பினர்களே அதன் தோல்விக்குக் காரணமானார்கள். அதேபோன்று தெற்கில் சிங்கள மக்களின் அதிக நம்பிக்கையை வென்ற கட்சியுடன் இணைந்து செயற்படவே தாங்கள் விரும்புகிறார் எனவும் சம்பந்தன் எம்மிடம் தெரிவித்தார்.- என்றும் எஸ்.பி திசாநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

(உ)

## ஊடகவியலாளர் நடேசனின் நினைவு தினம் அனுஷ்டிப்பு




படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 14 ஆவது நினைவு தினம் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் எஸ். வியாழேந்திரன் எம்.பி., ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

நடேசனின் 14 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது. யாழ்ப்பாண நகரில் உள்ள ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நினைவுத் தூபிக்கு மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டதுடன், நினைவுச் சுடரும் ஏற்றப்பட்டது. இந்தநிகழ்வில் ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் பங்கேற்றனர்.

(உ)

## அரசு என ஒன்று நாட்டில் இல்லை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த காட்டம்



கொழும்பு, ஜூன் 02

நாட்டில் அரசாங்கம் இல்லை என்பதை ஜனாதிபதியின் கூற்று உறுதிப்படுத்தியுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு கொழும்பிலுள்ள அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதனன்று வெளியிட்ட கருத்து தொடர்பில் ஆராய்வதற்குக் கூட்டு எதிர்க்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தலைமையில் குழு ஒன்று அமைத்துள்ளோம்.

அக்குழு ஆராய்ந்து உண்மைத் தன்மையை நாட்டுக்கு வெளிப்படுத்தும். மேலும் ஜனாதிபதியின் அக்கருத்தின் மூலம் நாட்டில் அரசாங்கம் இல்லை என்பது உறுதியாகியுள்ளது.

இவ்வாறான நிலையில் நாட்டை முன்னோக்கி அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்ல முடியாது. ஆகவே உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தி ஸ்திரமான அரசாங்கத்தை அமைக்க வேண்டும்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நான் உலங்கு வானூர்தியில் பயணித்தமை பற்றியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். எனினும் நான் ஜனாதிபதியாக பதவி வகித்துக் கொண்டிருந்தபோதே கொழும்பிலிருந்து உலங்கு வானூர்தியில் பயணித்தேன். அதாவது ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுவதற்கு முன்னரே நான் கொழும்பிலிருந்து பயணித்தேன். புதிய ஜனாதிபதி பதவியேற்கும் வரையில் முன்னையவர் பதவியில் இருப்பார்.

மேலும் அரசமைப்பின் இருபதாவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு வழங்காமலிப்பதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது. பல்வேறு காரணங்களை அடிப்படையாக் கொண்டே நாம் அந்த தீர்மானத்திற்கு வந்தோம். அக்காரணங்களை உரிய சந்தர்ப்பத்தில் தெரிவிப்போம். என்னை விட நாடு பெரியது. ஆகவே சுயநலங்களுக்கு அப்பால் சென்று தான் நடவடிக்கை எடுக்கிறோம்.- என அவர் மேலும் தெரிவித்தார்.

## பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பதிலாக மனித உரிமைகள் சட்டம்

### ஆணைக்குழுவின் தலைவி வேண்டுகோள்



கொழும்பு, ஜூன் 02

பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம் அவசியம் என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி கலாநிதி தீபிகா உடகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய கலாநிதி தீபிகா உடகம, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச தரப்படுத்தலில் ஏ தரத்தை பெற்றுள்ளமை மகிழ்ச்சி தருகிறது. இது அரசமைப்பின் மீதான 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றி அதன் மூலம் சுயாதீன ஆணைக் குழுக்களை வலுப்படுத்துமாறு கோரிய இலங்கை மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இலங்கை மக்களுக்கு நியாயமான பாதுகாப்பை வழங்க முடிந்தது.

இந்த ஆணைக்குழுவுக்கு வருடந்தோறும் 9 ஆயிரத்திற்கும், 10 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. இவற்றை விசாரிப்பதற்கு போதிய ஆளணி வளம் இருக்கவில்லை. ஆனால் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி கிடைத்துள்ளது என்றும் கலாநிதி தீபிகா உடகம தெரிவித்தார்.

# உள்வீட்டுச் சமாச்சாரம்

# தேசிய பிரச்சினையாக மாறியுள்ளமையால் நாட்டில் இழுபறிநிலை

நாட்டின் அரசியல் நிலைவரத்தை தீர்மானிக்கும் சக்தியாக ஊடகம் காணப்படுகின்றது. மக்கள் எதனை அரசியலாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் ஊடகத்தினால் தான் தீர்மானிக்கப் படுகின்றது.

மக்களின் உண்மையான பிரச்சினையை மூடி மறைப்பதிலும், வெளிக் கொண்டுவருவதிலும் ஊடகத்தின் பங்கு அலாதியானது என்பதை இன்று அறியாதவர்கள் எவரும் இல்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 30 ஆம் திகதி ஆற்றிய உரை ஊடகங்களில் காட்டுத் தீ போன்று பரவியது. அடுத்த நாள் (31) அரசியல் களத்தில் முக்கிய பேசு பொருளாக ஜனாதிபதியின் உரை காணப்பட்டது. நாட்டின் அரசியல் போக்கை திசை திருப்பும் ஒரு விடயமாக ஜனாதிபதியின் உரை அமைந்திருந்ததை அரசியல் கண்ணோட்டம் கொண்ட எவராலும் இலகுவாக விளங்க முடிந்திருக்கும்.




ஜனாதிபதியின் உரை குறித்து பல தரப்பினரும் பல்வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் காணப்படும் அதிகாரப் போட்டி நிலைமை, இன்றைய அரசி யலில் தேசிய பிரச்சினையாக மாறியுள் ளமை அனைவராலும் விமர்சிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது.

நாட்டின் அபிவிருத்தி, நாட்டு மக்களின் பிரச்சினைகள் என்பது எங்கோ ஒரு மூலையில் மறைந்து ஒளிந்து கிடக்கின்றன. எழுந்து நின்று எட்டிப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு அவை பல வீனப்படுத்தப்பட்டுள்ளன.

**மைத்திரியின் குமுறல்**

ஜனாதிபதியின் உரையும் அரசாங்கத்தின் கூட்டணி சேர்ந்துள்ள இரு கட்சிக்குள் நடைபெறும் அதிகாரப் போட்டியை மையமாகவே கொண்டிருந்தன. அரசாங்கத்தின் பங்காளியான ஐ.தே.க. புரிந்த தவறுகள் பலவற்றை ஜனாதிபதி தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

தான் பதவியேற்றவுடன் செய்யப்பட வேண்டி இருந்த முக்கிய பணி, நாடாளு மன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதாகும். இதற்குத் தடையாக ஐ.தே.க. அறிமுகப்படுத்திய 100 நாள் வேலைத்திட்டம் காணப்பட்டது. இந்த வேலைத்திட்டம் மடத்தனமான ஒரு நடவடிக்கை.



பொது வேட்பாளரை ஜனாதிபதியாக்கி, மத்திய வங்கியைக் கூறையாடுமாறு சோபித்த தேரர் சொல்லவில்லை.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைக்க ஐ.தே.கவில் எவரும் இல்லாததனாலேயே தன்னைப் பொது வேட்பாளராக போட்டியிட வைத்தனர்.

ஜனாதிபதியானவுடன் அறிமுகம் செய்யப்பட்ட 100 நாள் வேலைத்திட்டம் குறித்து தான் எதுவும் அறிந்திருக்கவில்லை.

அரச வங்கிகளின் நிதியை தனியார் வங்கிக்கு மாற்ற ஐ.தே.க. முயற்சித்தது. அதற்கு தான் இடமளிக்கவில்லை.

நாட்டின் கலாசாரத்துக்குப் பொருத்தமில்லாத பல விடயங்களை அறிமுகம் செய்ய ஐ.தே.க. முயற்சித்தது. அதற்கும் தான் இடமளிக்கவில்லை.

தான் ஜனாதிபதியானவுடன் 47 ஆசனங்களுடன் நாடாளுமன்றத்தில் காணப்பட்ட ஐ.தே.க. தலைவரை பிரதமராக நியமித்தேன். ஸ்ரீ ல.சு.கவின் தலைமைப் பதவியை நான் பொறுப்பேற்ற போது என்னை ஐ.தே.கவினர் விமர்சித்தனர். அவ்வாறு தான் பொறுப்பேற்காதிருந்திருந்தால், அரசமைப்பு மாற்றத்தை செய்திருக்க முடியாது. (19 ஆவது திருத்தச் சட்டம்)

இந்த அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான பனிப்போர் அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை முதல் புகைந்து புகைந்து தீ வெளியே வந்தவண்ணம் உள்ளது.

**ரணிலின் உத்தரவு**

இருப்பினும், ஜனாதிபதியின் உரைக்கு அடுத்த நாள் (31) கூடிய ஐ.தே.கவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பிரதமர் தமது கட்சி உறுப்பினர்களுக்கு தெரிவித்திருந்த கருத்து அரசியல் மட்டத்தில் முக்கிய மாக நோக்கப்பட்டது.

ஜனாதிபதியின் கருத்துக்கு எந்தவகையிலும் யாரும் பதிலளிக்கச் செல்ல வேண் டாம். தமது கட்சியின் அரசியல் தலைவர்கள் செய்ய வேண்டியது ஜனாதிபதிக்கு பதிலளிப்பது அல்ல, மக்களின் தேவைக்கு ஏற்ப பணியாற்றுவதாகும் எனவும் பிரதமர் தமது கட்சி உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் உரை குறித்து பல தரப்பினரும் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

**மைத்திரியின் உரை குறித்து மஹிந்த**

நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லையென்பது தற்பொழுது தெளிவாக விளங்குவதாகவும், பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி தகுதியான அரசாங்கம் ஒன்றை அமைப்பதே இதற்கான ஒரே வழி எனவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியின் உரை குறித்து கேட்டதற்கு கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் உரையில் அரசாங்கத் தின் நிலைமை தெளிவாக விளங்குகின்றது. பிரதமர் ஒரு பக்கமும், ஜனாதிபதி இன்னுமொரு பக்கமும் உள்ள நிலையில் நாட்டைக் கொண்டு செல்ல முடியாது. இதுபோன்ற நிலையில் நாட்டை அபி விருத்தி செய்ய முடியாது எனவும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டியிருந்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்பொழுது செய்ய வேண்டியுள்ள மிகச் சிறந்த நடவடிக்கை, தேர்தல் ஒன்றை நடத்தி எமக்கு பொருத்தமான ஒருவரை நியமித்துக் கொள்வதற்கான உரிமையைப் பெற்றுத் தருவதாகும் என ஜனாதிபதியின் உரைக்கு அல்லே குணவங்ச தேரர் விளக்கம் கொடுத்திருந்தார்.

**தேரரின் வர்ணனை**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எமது கிராமத்து கவிதை வரிகளின் சுவையை உணர்ந்த ஒருவர் எனவும், தாமரை இலையில் சோறு சாப்பிட முடியுமான ஒருவர் எனவும், குளத்தில் குளிக்கக் கூடிய ஒருவர் எனவும், காவியுடையின் வாசம் அறிந்தவர் எனவும் தேரர் வர்ணித்தார்.

இப்படியான ஒருவர் போய், முட்கரண்டியால் பாற்சோறு சாப்பிடுகின்ற, ஸ்ட்ரோவைப் பயன்படுத்தி இளநீர் குடிக்கின்ற, கிராமத்துக் கவிதைகளுக்குப் பதிலாக மைக்கல் ஜெக்ஸனின் பாடல்களைக் கேட்கின்ற பொருத்தமில்லாத குழுவுடன் சேர்ந்ததன் விளைவுதான் ஜனாதிபதியின் இத்தகைய உரைக்கான காரணம் எனவும் தேரர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மறைந்த சோபித்த தேரரின் இறுதிக்கிரியை நிகழ்வின்போது ஆற்றிய உரையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதாக சபதமிட்ட ஜனாதிபதி, அவரது நினைவு நிகழ்வில் அது தொடர்பில் ஒரு வார்த்தையையேனும் பேசவில்லையென பேராசிரியர் சரத் விஜேசூரிய தனது விமர்சனத்தை முன் வைத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு தயார் இல்லை. அவர் அதில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கே எதிர்பார்ப்பதாகவும் பேராசிரியர் மேலும் குற்றம்சாட்டியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தை சிறுபான்மை மக்கள் இணைந்து அமைப்பதற்கு பல காரணங்கள் இருந்தன என்பதை இந் நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிந்தே வைத்துள்ளனர். சிறுபான்மை மக்கள் எதிர் நோக்கியுள்ள



தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் எல்லோரிடத்திலும் இருந்தது. அந்தக் கனவுகள் இன்றைய அரசியல் நிலைமைகளைப் பார்க்கும் போது கானல் நீராக மாறிக் கொண்டு செல்வதாகவே உணர முடிகின்றது.

நாட்டில் அரசாங்கத்தை அமைப்பதும், மக்கள் தமது வாக்குகளை அதற்காக வழங்குவதும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் செலுத்துவதற்கும், மக்களின் பிரச்சினைகளுக்கு விடிவு கிடைப்பதற்குமேயாகும். ஆட்சிக் காலத்தைக் கட்சிப் பிரச்சினைகளில் கழித்து விட்டு, காலம் முடியும் போது காரணம் கூறி வாக்குக் கேட்டு வருவதற்கு அரசியல்வாதிகள் எண்ணிவிடக் கூடாது.

தமது பணியை மறந்து, உட்கட்சிப் பிரச்சினையை மக்கள் மேடையில் போட்டு, தீர்வை எதிர்பார்த்த மக்களுக்கு தொடர்ந் தும் நிலாச் சோறு ஊட்டுவதற்கு அரசியல் தலைவர்கள் முயற்சிக்கக் கூடாது என்பது சிறுபான்மை மக்களின் உளக் குமுறல்களாகும்.

> “நல்லாட்சி அரசாங்கத்தை சிறுபான்மை மக்கள் இணைந்து அமைப்பதற்கு பல காரணங்கள் இருந்தன என்பதை இந் நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிந்தே வைத்துள்ளனர். சிறுபான்மை மக்கள் எதிர் நோக்கியுள்ள தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் எல்லோரிடத்திலும் இருந்தது. அந்தக் கனவுகள் இன்றைய அரசியல் நிலைமைகளைப் பார்க்கும் போது கானல் நீராக மாறிக் கொண்டு செல்வதாகவே உணர முடிகின்றது.”

# அதிசயக் கோயில் அங்கோர்



கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன்




உயர்த்தப்பட்ட இரண்டாவது பாதையில் (350 மீற்றர் நீளம் 1145 அடி, 9 மீற்றர் அகலம் 30 அடி) தொடர்ந்து மேற்குபுறமாகச் சென்றால், இரு பக்கத்தில் பாம்பைப் போல் தோற்றமளிக்கும் மாடி கைப்பிடிச் சுவரைக் காணலாம். மாடிக் கைப்பிடிச் சுவரை சிறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. மேற்கே பார்த்தால் கம்போடியாவின் கொடியில் பொறிக்கப்பட்டிருக்கும் பாராட்டுக்குரிய அங்கோர் வாட்டை காணலாம். இந்த இடத்தில் நிற்கும்போது ஆச்சர்ய மூட்டும் ஐந்து மாடங்களிலும் ஆகாயத்தின் கூட்டத்திலும், மேகங்களின் சகோதரிகளோடும் மூழ்கி, இந்த நிஜ உலகில் வாழ்கிறோமா அல்லது மாய உலகில் வாழ்கிறோமா என்று எண்ணத் தோன்றும்.

ஆறு ஜோடி சடங்குகளுக்குரிய படிக்கட்டுகள் நடைமேடையோடு நடைபாதைக்கு இரு பக்கத்திலும் அமைந்து முற்றத்தை நோக்கிச் செல்கிறது. பாம்பு வடிவ மாடிப்படிகைச்சுவர் நடைபாதையை ஒட்டிச் செல்கிறது. இந்த அமைப்பு இறங்கும் நடைமேடை என்று சில நேரங்களில் அழைக்கப்படுகிறது. பாம்பு வடிவம் கொண்ட மாடிப்படிகைச்சுவர் விசிறியைப் போல் பாம்பின் தலைகள் விரிய இடது பக்கத்தில் முடிவடைகிறது.



நூலகங்கள் என்று அழைக்கப்பட்ட இரண்டு கட்டடங்கள் முற்றத்தின் இரு பக்கத்திலும் அமைந்திருக்கின்றன. கெமர் கலையின் ஆபரணப் பெட்டி என்று அழைக்கப்படும் இவைகள் அழகாக முழுமையாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மையமான பெரிய இடப்பரப்பு, தூண்கள், முன்தாழ்வாரம், படிகள் எல்லாம் இணைந்து அழகிய சிலுவை போன்று காட்சியளிக்கின்றன.

நூலகக் கட்டடங்களுக்கு முன்புறத்தில் இரண்டு குழிகள். ஒன்றின் நீளம் 65 மீற்றர் (213 அடி), அகலம் 50 மீற்றர் (164 அடி) வலதுபுறத்தில் இருக்கும் குழி தண்ணீர் நிறைந்திருக்கிறது. மற்றொரு குழி வறண்டு கிடக்கிறது.

நூலகக் கட்டடத்துக்கு பின்புறமாகவும் குழிக்கு முன்புறமாகவும் முதல் படிக்கு வலப்பக்கமாகத் திரும்பி 40 மீற்றர் (131 அடி) தூரம் சென்றால் ஒரு பெரிய மரத்தைக் காணலாம். இங்கிருந்து ஐந்து கோபுரங்கள் சூரியன் உதிக்கும் போது பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

டெரெஸ் ஆம் ஆனர் என்று அழைக்கப்படும் சிலுவைபோல் தோன்றும் மேல் தளத்துக்கு நடைபாதை அழைத்துச் செல்கிறது. மேல்தளத்தின் மூன்று பக்கத்துப் படிகளின் அடிபீடத்தில் அமைந்த சிங்க சிலைகள், இங்கே நாட்டியங்கள் நிகழ்ந்தன. இங்கிருந்தே மன்னர் ஊர்வலங்களையும் வெளிநாட்டு தூதுவர்களுக்கு வரவேற்பு அளிக்கின்றமையையும் பார்ப்பார்.

மேல்தளத்திலிருந்து முதல் நிலையில் பஸ்ரிலீப் அடுக்கிருக்கை அரங்குகள் என்று அறியப்பட்ட அடுக்கிருக்கைகள் அரங்குகளின் ரம்மியமான காட்சி தெரியும். வெளிப்பக்கத்தில் பார்வையாளருக்கான அறை. அங்கே 60 தூண்களின் வரிசை இருக்க உள்பக்கத்தில் சித்திரச் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்ட உறுதியான சுவர்.

முதல்நிலையையும் இரண்டாம் நிலையையும் இணைக்கும் பகுதி சிலுவை வடிவிலுள்ள அடுக்கிருக்கைகள். இந்த அற்புதமான கட்டிட வடிவமைப்பில் சதுரமான ஸ்தூபிகள் கொண்ட இரண்டு மூடப்பட்ட, அடுக்கிருக்கை அரங்குகள் மற்றும் நான்கு சமபாகங்களாகப் பிரிக்கப்பட்ட முற்றம் அதில் படிகளும் குழிகளும் அமைக்கப்பட்டுள்ளன. சுவரிலிருந்து வெளிப்படும் வளைவை உருவாக்குவதற்கு கெமர்கள் இம்முறையை பயன்படுத்தியமை வில் வளைவான கூரையில் தெரிந்தது.



இந்த அடுக்கிருக்கைகள், அரங்குகளில் உள்ள பல அழகிய அலங்கார வடிவங்கள் சிறப்புமிக்கவை. மரத்தால் செய்தது போல் தோற்றமளிக்கும். கைப்பிடிச் சுவர் கொண்ட ஜன்னல்கள், வில்வளைவான கூரை மீது அமைந்திருக்கும் ரோஜா பூக்கள். தூண்களில் அலங்கரிக்கப்பட்ட விளிம்புகளின் கீழே அப்சரஸ்கள் வடிவமைக்கப்பட்ட வரிசை. ஸ்தூபிகளுக்குக் கீழே துறவிகளின் வடிவங்கள். இந்த அடுக்கிருக்கைகள் அரங்கில் இருக்கும் சில தூண்களில் கெமர், சமஸ்கிருத மொழிகளில் எழுதப்பட்ட கல்வெட்டுகள் உள்ளன.

முற்றத்தின் இருபக்கத்திலும் ஒரே மாதிரியான இரண்டு நூலகங்கள். ஆனால் இவை தரைவழியின் நுழைவாயிலில் இருப்பவைகளைவிட சிறியவை.

1000 புத்தர்கள் உள்ள அடுக்கிருக்கை அரங்கு இடது பக்கம் இருக்கிறது. அங்கோர்வாட் புத்த மதத்தைத் தழுவியிருந்த காலத்தைச் சேர்ந்த பல சிலைகள் இங்கே இருந்தன. ஆனால் சில சிலைகளே இப்போது உள்ளன.

வலது பக்கத்தில் இருக்கும் அடுக்கிருக்கை அரங்கு ஹோல் ஒப் எக்கோ என்று அழைக்கப்படுகிறது. ஹோல் ஒப் எக்கோவில் எதிரொலியைக் கேட்க வேண்டுமானால் அரங்கின் கடைசிக்குச் சென்று முதுகு சுவர் பக்கமாக இருக்கும் படி, வலப்பக்க மூலையில் நின்று மார்பைக் கட்டை விரலால் அழுத்த வேண்டும்.

நூலகத்தைக் காண விரும்புவோர் அரங்கின் முடிவில் இருக்கும் கதவின் வழியே செல்ல வேண்டும். இந்த நூலகத்திலிருந்து பார்க்கும்போது அங்கோர் வாட்டின் மேற்பகுதி மிகவும் அழகாகத் தோற்றமளிக்கும்.

சிலுவை போல காட்சியளிக்கும் அரங்குகளின் மையத்திற்கு திரும்பி நடுவில் உள்ள கோபுரங்கள் நோக்கி நடக்க வேண்டும். அங்கே ஏறுவதற்கான படிக்கட்டுகள் இருக்கின்றன. இரண்டாம் நிலை அரங்கின் வெளிப்புறச் சுவர் பார்வையாளரின் அறை. இது உறுதியாகவும் அலங்காரம் இல்லாமலும் இருக்கிறது. இவ்வறை துறவிகளும், மன்னரும் தியானம் செய்ய பயன்பட்டிருக்கலாம்.

இரண்டாம் நிலை அரங்கின் வலிமையான வெளிப்புறம் உள்புற அலங்காரத்தின் கிளையாகத் திகழ்கிறது. அரங்கின் சுவரை 1500 அப்சரஸ்கள் அலங்கரிக்கின்றனர். இவர்களின் காட்சி முடிவில்லா ஆன்மிக உணர்வை எழுப்புகிறது. இப்பெண் உருவங்கள் பார்வையாளரை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன. இவர்கள் பாற்கடலைக் கடைந்ததினால் உருவானவர்கள்.

ஒருவர் முற்றத்தில் நடந்து செல்லும்போது பெண்களின் உருவங்களை சுவர்களிலும் மாடங்களிலும் காணலாம். தூரத்தில் இருந்து பார்க்கும்போது ஒரே மாதிரியாகத் தெரியும். இவைகளின் அருகில் நெருங்கிப் பார்க்கும்போது ஒவ்வொரு உருவமும் வித்தியாசமாக இருப்பது தெரியும்.தேவலோக பெண்களின் கூந்தல் அலங்காரம், தலைப்பாகை ஆபரணங்கள் யாவும் பார்ப்பவரின் மனதை வெற்றி கொள்ளும்.

அங்கோர் வாட்டில் அப்சரஸ்கள் முதலில் இருவராகவும் மூவராகவும் காட்சியளிக்கிறார்கள். ஆண்களை மயக்கும் விதமாக கைகளை இணைத்தவாறு இவர்கள் நிற்கும் கோலம் மிகவும் ரம்மியமானது.

கெமர் பெண்களின் அழகைப் புகழும் விதமாக பாங் என்ற கம்போடியக் கவிஞர் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்.

இந்த இலட்சக்கணக்கான அழகிய உருவங்கள் எப்போதும் கண்கள் சோர்வடையாதவாறு உணர்வுகளை நிரப்புகின்றன. ஆன்மா புதுப்பிக்கப்படுகிறது. இதயம் எப்போதும் திருப்தி அடைவதே இல்லை. அந்த உருவங்கள் மனிதக் கரங்களால் செதுக்கப்பட்டவை அல்ல, கடவுளின் கரங்களால் உருவாக்கப்பட்டவை. என்ன அழகான பெண்கள்; உயிரோட்டம் உள்ளதுபோல்!

மன்னரும், உயர்ந்த அர்ச்சகர்களும் மட்டுமே அங்கோர் வாட்டின் மேற்பக்கத்தில் அல்லது மூன்றாம் நிலைக்கு அனுமதிக்கப்பட்டனர். இங்கே மூடிய அடுக்கிருக்கை அரங்குகள் இல்லாதபோதும் இதுவே ஐந்து மைய கோபுரங்களுக்கு அடித்தளமாக விளங்குகிறது. ஒரு கோபுரம் புனிதமான கோயிலை தாங்கியிருக்கிறது.



சதுர அடிதளம் 600 மீற்றர் (197 அடி நீளம்), மேல்நிலை 13 மீற்றர் (43 அடி), 40 மீற்றர் (131 அடி உயரம். இரண்டாம் நிலையைவிட பன்னிரெண்டு ஜோடி படிகள் – ஒவ்வொன்றிலும் 40 படிகள் – ஒவ்வொரு பக்கத்தின் நடுவிலும் ஒன்று மற்றும் மூலையில் இரண்டு, 70 டிகிரி மேல் நோக்கி அமைந்திருக்கின்றன.

அங்கோர்வாட்டின் கட்டடக் கலையின் கலைவையின் மீண்டும் மீண்டும் காட்சியளிக்கும் அம்சங்கள் எல்லாம் மேல்நிலையில் தோன்றுகின்றன. இந்த



இடம் சிலுவை வடிவில் பிரிக்கப்பட்டு மூடிய அரங்குகளால் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு படிக்கட்டின் உச்சியிலே தாழ்வாரமும், ஸ்தூபிகளும் கொண்ட நுழைவு கோபுரம் உள்ளன. பாதையின் இரு பக்கத்திலும் இரண்டு வரிசையில் ஸ்தூபிகள் நுழைவு கோபுரத்தை மைய கட்டடத்தோடு இணைக்கின்றன.

மேல் நிலையின் மூலைகள் நான்கு கோபுரங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு குறுகிய மூடிய அரங்கு, வரிசையான தூண்களும், ஜன்னல்களும், கைப்பிடி வெளிப்புறச் சுவர்களும் மூன்றாம் நிலையைச் சுற்றி அமைந்திருக்கின்றன. (தொடரும்)



# கல்விக் கதிர் வெளியீடு

தரம்-5

புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் **36**

பகுதி – II

7) பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்து சொல்லை எழுதுக.

i. சுகம் ..............................................

ii. வன்மை ......................................

8) பின்வரும் பழமொழிகளின் வெற்றிடங்களை நிரப்புக.

i. பழகப் பழக பாலும் ..................................................

ii. இக் கரைக்கு அக்கரை ........................................................

9) கீழ்வரும் சொற்களை சேர்தெழுதுக.

i. விளக்கு+ஏற்றி ................................................

ii. வெண்மை+நிறம் ..................................................

10) பின்வரும் வாக்கியத்தை பெண்பாலாக மாற்றி எழுதுக.

அவன் தனது தாயுடன் சென்றான்.

..........................................................................................

11) பின்வரும் சொற்களின் உயிர்க்குறிகளை எழுதுக.

i. நேரம் -......................................................

ii. நூலகம் - ..........................................................

12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

i. I am sorry..........................................................................

ii. Where do you live? ...........................................................

13) பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தை தமிழில் எழுதுக.

i. மெயமகே பு(ட்)டுவ ..................................................................


ii. கிரி, சுது பாட்டய ..................................................................


14) ஒவ்வொரு சொல்லிற்குமான ஆங்கிலச் சொல்லின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

i. காலை..........................................................

ii. இரவு ...........................................................

15) பின்வரும் படத்திற்குப்பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

i.  ..........................................................

ii.  ..........................................................

16) ஒரு நாட்டின் இயற்கைச் சூழலும் மனிதர்களின் நற்செயல்களும் அந்நாட்டுக்குச் சிறப்பைத் தருகின்றன. நல்ல மனிதர்கள் வாழும் நாட்டின் மதிப்பு உலகின் எல்லாத் திசைகளிலும் பரவுகின்றது. "நல்ல மனிதனிடம் இருக்கக்கூடிய சிறந்த பழக்கவழக்கங்கள்" என்னும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................






## மலிவான பொருள்!

ஒரு தடவை துருக்கி மன்னர் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். அவருடைய பரிவாரத்துடன் முல்லாவும் சென்றார். மன்னர் பரிவாரத்துடன் சமையல்காரர் குழு ஒன்றும் சென்றது.

சமையல்கார குழுவின் தலைவன் காட்டில் கூடாரமடித்து சமையல் செய்வதற்கான ஏற்பாடுகளில் முனைந்தபோது அரண்மனையிலிருந்து உப்பு எடுத்து வர மறந்து விட்டது தெரிந்தது.

சமையற்காரத் தலைவன் மன்னர் முன் சென்று அச்சத்தோடு தலை கவிழ்ந்து நின்றான்.

என்ன சமாச்சாரம் என்று மன்னர் விசாரித்தார்.

சமையல் குழுத்தலைவன் நடுங்கிக்கொண்டே தான் உப்பு எடுத்து வர மறந்துவிட்ட செய்தியைச் சொன்னான்.

மன்னர் சமையல் குழுத் தலைவனைக் கடுமையாகக் கண்டித்தார். பிறகு தனது வீரர்களில் ஒருவனை அழைத்து நீ குதிரை மீதேறி அண்மையிலிருக்கும் கிராமத்திற்குச் சென்று யார் வீட்டிலாவது கொஞ்சம் உப்பு வாங்கிவா என உத்தரவிட்டார்.

அப்போது முல்லா முன்னால் வந்து மன்னரை வணங்கினார்.

என்ன முல்லா ஏதாவது சொல்ல வேண்டுமா? என்று கேட்டார் மன்னர். ஆமாம் மன்னவா படை வீரனிடம் கொஞ்சம் காசு கொடுத்து அனுப்புங்கள், குடிமக்களிடம் உப்பு இனாமாகக் கேட்க வேண்டாம் என்றார் முல்லா.

ஏன் குடிமக்கள் ஒரு கை உப்பை இலவசமாகக் கொடுக்க கூட முடியாத நிலையில் இருக்கிறார்களா என மன்னர் ஆச்சரியந்தோன்றக் கேட்டார்.


மன்னர்பெருமானே நான் சொன்னதன் உட்பொருளைத் தாங்கள் விருப்பம் அறிந்தால் மக்கள் ஒரு மூடை உப்புகூட இனாமாகக் கொடுப்பார்கள். ஆனால் மக்களுக்கு உங்கள்மீது இருந்த மரியாதை போய்விடும் என்றார் முல்லா.

ஏன்? என்று கேட்டார் மன்னர்.

ஏன்ன காரணத்தினால் நாம் உப்பு கேட்கிறோம் என்று மக்களுக்குத் தெரியாது. உப்பு மிகவும் மலிவான பொருள். பரம ஏழை வீட்டிலும் உப்புக்குப் பஞ்சமிருக்காது. மன்னரிடம் உப்பு இல்லாமல் இல்லை. உப்பு கேட்கிறார் என்றால் அந்த அளவிற்கு அவர் நிலை கேவலமாகிவிட்டது என்று தான் மக்கள் உங்களைப் பற்றி நினைப்பார்கள். பின்னர் அவர்கள் உங்களை எவ்வாறு மதிப்பார்கள்? அதனால் நமக்குத் தேவையான உப்பின் விலை மதிப்புக்கு அதிகம் பொருளை உப்பு தருபவருக்கு கொடுத்துவிட்டு உப்பை வாங்கிவரச் சொல்லுங்கள் என்றார் முல்லா.

அவர் சொன்ன தத்துவம் சரிதான் என்று துருக்கி மன்னருக்குத் தோன்றியது. ஆகவே பணம் கொடுத்தே உப்பை வாங்கிவருமாறு படை வீரனுக்கு உத்தரவிட்டார்.

## யார் யார் எங்கே போகணும்?
## பாதையை சரியாக் காட்டுங்கள்...





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

காலைக்கதிர்
Kalaikkathir



# அநாவசியமாக மக்களின் பணத்தை செலவிடும் வலி. மேற்கு பிரதேச சபை

## 40 லட்சம் ரூபா செலவில் மின்னுயர்த்தி தேவைதானா என்கிறார் இதயகுமாரன்



யாழ்ப்பாணம்,ஜூன் 02

வலிகாமம்மேற்கு பிரதேசசபை, மக்களுக்கான அத்தியாவசிய அபிவிருத்திக்கான நிதி, ஆளணி என்பன பற்றாக்குறையாக இருக்கும் நிலையில், 40 லட்சம் ரூபா பணத்தில் மின்னுயர்த்தி அமைக்கும் அநாவசியப் பணியில் ஈடுபட்டுள்ளது

இவ்வாறு மக்களின் பணத்தை வீணாக்கும் பிரதேச சபையின் செயலை, அந்தப் பிரதேச சபை உறுப்பினரும் மாற்றுத்திறனாளியுமான சி. இதயகுமாரன் அம்பலப்படுத்தியுள்ளார்.

மக்களின் பணத்தில் மேற்கொள்ளப்படும் அநாவசியப் பணியை நிறுத்துமாறும் அவர், மாகாண உள்ளூராட்சி அமைச்சரான முதலமைச்சருக்கு அவசர மனுவொன்றையும் கையளித்துள்ளார்.

இது குறித்து அவர் முதலமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரிடம் கையளித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் ஒரேயொரு மாடியைக் கொண்ட கட்டடத்துக்கு மின் உயர்த்தி பொருத்துவதற்கு மே மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற கூட்ட அமர்வில் சபையின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் சம்மதத்துடன், சபையின் பேரில் நிலையான வைப்பில் உள்ள 40 இலட்சம் ரூபா பணத்தைச் செலவிடுவதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு செலவு செய்யப்படுகின்ற 40 லட்சம் ரூபா பணத்தையும், தற்பொழுது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சங்கானைச் சந்தை கடைத்தொகுதியை ஏலத்தில்விடும்போது கிடைக்கப்பெறும் முற்பணத்திலிருந்து பெற்று, மீளவைப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

மேற்படி விடயம் தொடர்பாக நான் எனது நியாயபூர்வமான கருத்தையும்எதிர்ப்பையும்கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற கூட்ட அமர்விலும் 15 ஆம் திகதி அடுத்த கூட்ட அமர்விலும் தெரிவித்திருந்தேன். மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான குடிதண்ணீர் வழங்கல், திண்மக் கழிவகற்றல், சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் வீதிகள் சீரமைத்தல் போன்ற பல பணிகள் காணப்படுகின்றன.

எனவே மேற்படி மக்களது அத்தியாவசியத்தேவைகள் முழுமைப்படுத்தப்படாமல் மின் உயர்த்தியைச் சபையினுடைய நிதியில் பொருத்துவது பொருத்தமற்றது என, உண்மையிலேயே மின்னுயர்த்தியின் பயன்பாடு அவசியமுள்ள மாற்றுத்திறனாளியான என்னால் ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டது.

அத்துடன் , மின்னுயர்த்தியைப் பொருத்துவதற்கு மாற்று வழிகளாக மத்திய அரசிடமோ, அல்லது மாகாண அரசிடமோ, அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களிடமோ, அல்லது மாகாண சபை உறுப்பினர்களிடமோ, அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களிடமோ தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் சபையில் ஆலோசனை ஒன்று முன் வைக்கப்பட்டது.

அத்துடன் கடந்த காலங்களில் பிரதேசசபையால் மேற்கொள்ளப்பட்ட தொலை நோக்கற்ற செயலும் என்னால் சுட்டிக் காட்டப்பட்டது. அதாவது வருடத்தில் ஒரு சில தடவைகள் மட்டும் பாவனைக்கு உட்படுத்தப்படும் பிரதேச சபையின் பொது மண்டபம் குறித்த கட்டடத்தின் கீழ்மாடியில் உள்ளது. ஆனால் நாளாந்தம் மக்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் பாவனைக்கு உட்படுத்தப்படும் பிரதேச சபையின் அலுவலகம் அதே கட்டடத்தின் மேல்மாடியிலும் கட்டப்பட்டுள்ளது.

இதனை மாற்றி அலுவலகத்தைக் கீழேயும், பொது மண்டபத்தை மேலேயும் தொலைநோக்குச் சிந்தனையோடு அமைத்திருக்க வேண்டும். முன்னைய சபை போன்று இப்படியான தவறுகளை இனிவரும் காலங்களில் மேற்கொள்ளாது மக்கள் நலன் சார் சிந்தனையுடன் திறம்பட செயலாற்ற வேண்டும் என்றும் சபையில் கூறியிருந்தேன்.

ஆனால் சபையானது எனது நியாயபூர்வமான கருத்தையும் எதிர்ப்பையும் கருத்தில் கொள்ளாது மின்னுயர்த்தியைச் சபையின் வருமானத்தில் பொருத்துவதுஎன்றுதீர்மானம்நிறைவேற்றி அமைச்சரின் அனுமதிக்காக அனுப்பி வைத்துள்ளது.

மக்களது அத்தியாவசிய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு போதிய நிதி, ஆளணி மற்றும் வாகன பற்றாக்குறை நிலவுவதாக தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டது என்பதைத் தங்களின் கவனத்திற்குத் தயவுடன் தெரியப்படுத்துகிறேன்.

அத்துடன் மாற்றுத்திறனாளியாக இருந்தும் நான் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கப்பால் மக்களுக்கு மகத்தான திருப்திகரமான சேவை செய்ய வேண்டும் என்கின்ற ஒரேயொரு நோக்கிலேயே சபையின் நிதியில் அல்லது சபை வருமானத்தில் மின்னுயர்த்தி பொருத்தும் தீர்மானத்தை எதிர்க்கிறேன்.

அத்துடன் சபை நிதியல்லாத மேற்குறிப்பிட்ட வழிகளில் நிதியைப் பெற்று மின்னுயர்த்தியை பொருத்துவதற்கு எனக்கு எந்த விதமான ஆட்சேபனையுமில்லை என்பதையும் தயவுடன் தெரியப்படுத்துகிறேன். – என்றுள்ளது. (ஐ)

## வடக்கு முறைப்பாட்டுக் குழுவின் உத்தரவை மதிக்காத அதிகாரிகள்

### உறுப்பினர் பரஞ்சோதி விசனம்



யாழ்ப்பாணம்,ஜூன் 02

வடக்கு மாகாண சபையின் முறைப்பாட்டுக் குழுவுக்கு ஒரு விடயத்தைக் கொண்டுவந்து அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்படுகின்ற போதும் திணைக்களங்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை, அதே போன்றுதான் சபையில் தீர்மானம் எடுத்தாலும் அதனை அதிகாரிகள் மதிக்கின்றார்கள் இல்லை. ஆகையால் மாகாணசபைக்கும் இந்தக் குழுவுக்கும் என்ன அதிகாரம் உண்டு? என்று கேள்வி எழுகின்றது என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அ.பரஞ்சோதி கேள்வியெழுப்பினார்.

வடக்கு மாகாண சபையின் 122 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் அவைத்தலை வர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

“வடக்கு மாகாண சபையின் அதிகாரத்துடன் அல்லது அனுமதியுடன் இந்த முறைப்பாட்டுக் குழு மாகாண சபை உறுப்பினர்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டது. இந்தக் குழுவுக்குப் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்படும் இடத்து அது தொடர்பில் பல நாள்கள் ஆராய்ந்து, அந்த விடயம் தொடர்பில் சபைக்குப் பரிந்துரைகளை செய்து, பின்னர் நடவடிக்கைகாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குத் தீர்மானம் அனுப்பி வைக்கப்படுகின்றது.


ஆனால் திணைக்கள அதிகாரிகள் அந்தத் தீர்மானம் தொடர்பில் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல், நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகின்றனர். இது தொடர்பில் வடக்கு மாகாண சபையும் ஒன்றும் செய்ய முடியாமல் உள்ளது. இந்த நிலையில் முறைப்பாட்டுக் குழுவுக்கு முறைப்பாடு செய்வதால் மக்களுக்கு என்ன நன்மை உண்டு? என்ற சந்தேகம் எழுகின்றது என உறுப்பினர் பரஞ்சோதி கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவைத்தலைவர் சிவஞானம், முறைப்பாட்டுக் குழுவுக்கு உத்தர விடும் அதிகாரம் உண்டு. அதேபோன்று பலம் வாய்ந்த அதிகாரம் கொண்ட குழு, சபைக்குச் சிபார்சு செய்யவும் அதிகாரம் உண்டு. ஆகவே இந்தக் குழு பரிந்துரை செய்த விடயங்களை நடைமுறைப்படுத்தாத திணைக்களங்கள் தொடர்பில் ஆராய்வோம் எனக் கூறினார்.

இதன் போது குறுக்கிட்ட எதிர்க் கட்சித் தலைவர் தவராசா,

முறைப்பாட்டுக் குழு பரிந்துரை செய்த விடயங்களில் எத்தனை விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன என்று நிரல்படுத்த முடியுமா? எனக் கேள்வி எழுப்பினார். இதுவரை 373 விடயங்கள் கவனத்தில் கொண்டு வரப்பட்டுள்ளன, இவற்றில் முக்கியமான விடயங்களை நிரல் படுத்தித் தருகின்றேன். எல்லாவற்றையும் நிரல்படுத்த முடியாது என அவைத் தலைவர் பதில் கூறினார். (ஐ-7)

## வடக்கில் ஓட்டோக்களுக்கு விரைவில் கட்டண மீற்றர்



### முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 02

வடக்கு மாகாணத்தின் நகர்களில் சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோக்களுக்கு கட்டண மீற்றர் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 122வது அமர்வு நேற்றுமுன்தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனால் வடக்கு மாகாண நகர்களில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்கள் அதிக கட்டணம் அறவிடுகின்றன, கட்டண மீற்றர் பொருத்த நடவடிக்கை எடுக்க முடியுமா? எனக் கேள்வி ஒன்றை முதலமைச்சரிடம் தொடுத்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இதே கேள்வியைத் தவரசாவும் என் னிடம் கேட்டிருந்தார். எதிர்க்கட்சி உறுப்பினர்க ளும் எமது உறுப்பினர்களும் சேர்ந்து எனக்கு எதிராகக் கேள்வி கேட்கின்றனரா? என்று தெரியவில்லை, இருந்தும் வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் பிரகாரம் 16.01.2017 இல் பொருத்த உத்தரவிடப்பட்ட போதிலும் அது தாமதமாகிவிட்டது.

இந்த நிலையில் மோட்டார் போக்கு வரத்து ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை மொழிபெயர்க்கப்படும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் முடிந்த பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மீற்றர் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மொழிபெயர்ப்புப் பணிகள் இரு வார காலத்தில் பூர்த்தியாகும்.– என்றார். (ஐ-7)

## காணாமற்போன மாணவன் மன்னாரில் கண்டுபிடிப்பு

வவுனியா,ஜூன் 02

வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமல்போயிருந்த மாணவன் ஒருவன் மன்னாரில் வைத்து உறவினர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளான்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தனியார் வகுப்புக்குச் சென்று வருவதாக கூறி ப் புறப்பட்ட ச. சாருபன் என்ற மாணவன் மறுநாளும் வீடு வரவில்லை. பெற்றோரால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பெற்றோர் கடும் பிரயத்தனம் மேற்கொண்டு பல இடங்களிலும் தேடுதல் நடத்தியிருந்தனர். நேற்றுமுன்தினம் மன்னார்ப் பகுதியில் தேடுதல் நடத்தியபோது மாணவனை அங்கு பல இடங்களில் கண்டதாக பலரும் தெரிவித்தனர். இதனையடுத்து தேடுதலை தீவிரப்படுத்திய உறவினர்கள் மன்னாரில் நகர்ப்பகுதியில் சைக்கிளில் சுற்றித் திரிந்த நிலையில் அவரைக் கண்டு பிடித்துள்ளனர்.

மனரீதியியான குழப்பம் காரணமாகவே மாணவன் வீட்டில் இருந்து சைக்கிளில் மன்னார் சென்றுள்ளான் எனவும், அங்கு தீருக்கேதீச்சரம் கோவில் உட்பட பல இடங்களுக்கும் கடந்த நான்கு நாள்களாக சென்றுள்ளான் என்றும் உறவினரொருவர் தெரிவித்தார். (ஐ-100)

# பர்தா அணிவதற்கு டென்மார்க் தடை

கொப்பன்ஹேஹன், ஜுன் 02

டென்மார்க்கில் பொது இடங்களில் பர்தா போன்ற முகத்தை மறைக்கும் ஆடைகள் அணிய அந்த நாட்டு அரசு தடைவிதித்துள்ளது.

முகத்தை மறைக்கத் தடை தொடர்பான சட்ட வரைவை நேற்றுமுன்தினம் அந்நாட்டு அரசு, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது.

75 நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த தடைச் சட்டத்துக்கு ஆதரவாகவும், 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

இந்த சட்டவரைவு வெற்றி பெற்றுள்ளதைத் தொடர்ந்து, பொது இடங்களில் எவரேனும் முகத்தைத் திரையிட்டு மறைத்திருந்தாலோ அல்லது முகத்தை மறைக்கும் விதமாக பர்தா அணிந்து இருந்தாலோ அவர்களுக்கு அபராதத்துடன் கூடிய தண்டனை வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது. (ஐ)



## அமெரிக்காவுடனான சிக்கல் படிப்படியாகத் தீர்க்கப்படும்

### கூறுகின்றது வடகொரியா



வடகொரிய – அமெரிக்க உறவில் காணப்படும் சிக்கல் மற்றும் கொரிய தீபகற்பத்தை அணுவாயுதமற்ற பிராந்தியமாக மாற்றுதல் ஆகிய விடயங்களைப் படிப்படியாகத் தீர்க்க எதிர்பார்த்துள்ளதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் மற்றும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கெய் லவ்ரோவ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பியாங்யாங்கில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பின்போது வடகொரியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடகொரிய ஜனாதிபதியை ரஷ்யாவுக்கு வருமாறு, செர்கெய் லவ்ரோவ் அழைப்பு விடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான லவ்ரோவின் முதல் வடகொரிய விஜயம் இதுவெனச் சீன ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## நிகரகுவாவில் கலவரம்: பொதுமக்கள் 11 பேர் பலி



மத்திய அமெரிக்கா நாடான நிகரகுவாவில் அதிபர் டானியல் ஆர்டெகோவுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

மத்திய அமெரிக்க நாடான நிகரகுவாவின் அதிபராக டானியல் ஆர்டெகோ கடந்த 2007ஆம் ஆண்டு முதல் பதவி வகித்து வருகிறார். அவரது ஆட்சிக்கு எதிராகக் கடந்த ஏப்ரல் மாதம் முதல் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டங்களில் அவ்வப்போது கலவரங்கள் ஏற்படுகின்றன. இதில் உயிரிழப்புகளும் நிகழ்ந்துள்ளன.

இந்நிலையில், அதிபர் டானியல் ஆர்டெ கோக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த போராட்டத்தின் போது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார் எனக் கூறப்படுகிறது. இந்த துப்பாக்கிச்சூட்டில் பொதுமக்களில் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முஷாரப்பின் பாஸ்போர்ட்டை முடக்கியது பாகிஸ்தான்!

பாகிஸ்தான் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப்பின் தேசிய அடையாள அட்டை மற்றும் பாஸ்போர்ட்டை முடக்குவதற்கு உள்துறை அமைச்சகத்துக்கு அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

முஷாரப் பாகிஸ்தானை ஆட்சி செய்தபோது 2007 நவம்பரில் அவசர நிலை பிரகடனம் செய்தார். இதற்கு எதிராக முஷாரப் மீது தேசத் துரோக குற்றச்சாட்டு கடந்த 2014 இல் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் துபாய் சென்ற முஷாரப் அங்கேயே தங்கி விட்டார். தேசத் துரோக வழக்கில் அவர் ஆஜராகாதமையைத் தொடர்ந்து அவரது



பாஸ்போர்ட் மற்றும் அவருக்கு வழங்கப்படும் சில சலுகைகளை முடக்க சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இதன்மூலம் முஷாரப் வெளிநாடு செல்ல முடியாது. வங்கிப் பரிவர்த்தனைகள் செய்ய முடியாது. மேலும் பாகிஸ்தானிலோ அல்லது வெளிநாட்டிலோ சொத்துகளை வாங்கவோ, விற்கவோ முடியாது.

முஷாரப் 1999 – 2008 வரை பாகிஸ்தானை ஆட்சி செய்தார்.

அவர் மீது தேசத்துரோக வழக்கு தவிர, முன்னாள் பிரதமர் பெனாஸிர் கொலை வழக்கு உள்ளிட்ட பல வழக்குகள் உள்ளன. தேசத் துரோக வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளது.

# புதிய இறக்குமதி வரிகளை அமுலாக்கியது அமெரிக்கா

ஐரோப்பிய ஒன்றியம், கனடா மற்றும் மெக்ஸிக்கோவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உருக்கு மற்றும் அலுமினியப் பொருள்கள் மீதான அமெரிக்காவின் வரி விதிப்புகள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வந்தன.

அமெரிக்க வர்த்தகச் செயலாளர் வில்பர் ரோஸ் நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார்.

இந்த மூன்று வர்த்தகப் பங்காளிகளிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் உருக்கு மற்றும் அலுமினியப் பொருள்களுக்கு வரி விலக்களிக்கப்படாது என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீர்மானித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, உருக்கு பொருள்கள் மீது 25 வீதம் மற்றும் அலுமினியப் பொருள்கள் மீது 10 வீத இறக்குமதி வரி நேற்று முதல் அமுலுக்கு வந்தது.

இந்நிலையில், அமெரிக்காவின் வரிவிதிப்புக்கு உறுதியான மற்றும் சரிவிகித அளவிலான நடவடிக்கைகள் ஐரோப்பிய ஒன்றியத்தால் எடுக்கப்படும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு உருக்கு மற்றும் அலுமினிய உற்பத்தியாளர்கள் மிகவும் முக்கியம் என்றும், சர்வதேச அளவில் அவற்றில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையால் தங்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் அந்த வரிவிதிப்பை ட்ரம்ப் நியாயப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்புக்கு கனடா அச்சுறுத்தலாக இருக்கும் என்று கருதுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ரூடே தெரிவித்துள்ளார். (ஐ)

## ட்ரம்பிற்கு கடிதம் அனுப்பினார் கிம்

பியங்யாங், ஜுன் 02

அமெரிக்க ஜனாதிபதிக்கு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளமையைத் தொடர்ந்து இருவருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

இதேவேளை வடகொரியாவை அணுவாயுதங்களை கைவிடச்செய்வதற்கான முயற்சி உடனடியாக வெற்றியளிக்காது என தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதற்கு சிறிது காலம் தேவை எனக் கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் எதிர்வரும் 12 ஆம் திகதி வடகொரியா ஜனாதிபதியை சந்திப்பதற்கு இன்னமும் ஆர்வத்துடன் உள்ளேன் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வடகொரியா அணுவாயுதங்களைக் கைவிடச்செய்வதற்கான முயற்சிகள் ஒரே சந்திப்பில் வெற்றிபெற வேண்டும் என்பதுதான் எனது விருப்பம். எனினும் அதற்கான சாத்தியங்கள் குறைவு. இதன் காரணமாக ஆனாலும் ஏதோ ஒரு தருணத்தில் நான் அதனை நிறைவேற்றிக்காட்டுவேன் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## கருக்கலைப்புக்கு ஆதரவாக நடனம்

தென் அமெரிக்க நாடான ஆர்ஜென்ரீனாவில் கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கப்படுவதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், நூற்றுக்கணக்கான பெண்கள் ஒன்றிணைந்து கைக்குட்டை நடனமொன்றை அரங்கேற்றினர்.

பெண்களின் கோஷங்களுக்கு மத்தியில் ஆர்ஜென்ரீனக் காங்கிரஸிற்கு முன்னால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்த நடனம் அரங்கேற்றப்பட்டிருந்தது.

கருக்கலைப்பை சட்டபூர்வமாக்குவது தொடர்பாக ஆர்ஜென்ரீனக் காங்கிரஸில் விவாதிக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே இவ்வாறு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பச்சை நிற கைக்குட்டைகளை கழுத்தில் அணிந்தவாறு அமைதியாக பேரணியாக வந்தவர்கள் ஆர்ஜென்ரீனக் காங்கிரஸிற்கு முன்னால் நடனமாடியுள்ளனர்.



துஷ்பிரயோகம் மற்றும் தாயின் உயிருக்கு ஆபத்தான சில சந்தர்ப்பங்களில் ஆர்ஜென்ரீனா உள்ளிட்ட பெரும்பாலான இலத்தீன் அமெரிக்க நாடுகள் கருக்கலைப்பை அனுமதித்துள்ளன. ஆனால், இந்த அனுமதி உரிமை ஆர்வலர்களின் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஆர்ஜென்ரீனா கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கினால், அதனை செய்த இலத்தீன் அமெரிக்காவின் மிகப்பெரிய நாடு என்ற பெருமை அந்த நாட்டைச் சேரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மோடிக்கும் பா.ஜ.கவுக்கும் எதிராக ஒன்று திரளுகின்றன மாற்றுக் கட்சிகள்

## அடுத்த ஆண்டு பொதுத் தேர்தலுக்கு வியூகம் வகுப்பு

இந்தியா முழுவதும் பரபரப்புடன் எதிர்பார்க்கப்பட்ட இடைத்தேர்தல் முடிவுகள் ஆளும் பா.ஜ.கவுக்கும், பிரதமர் மோடிக்கும் அதிர்ச்சிகரமான முடிவுகளை தந்துள்ளன. அடுத்த மக்களவை தேர்தலுக்கு 11 மாதங்களே உள்ள நிலையில், அதற்கு முன்னோட்டமாக 'மினி பொதுத்தேர்தலாக' இது வர்ணிக்கப்பட்டது.

அதற்கு சில காரணங்கள் உள்ளன. பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசுக்கு எதிராகக் கடந்த சில மாதங்களாகவே அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒன்று திரண்டு வருகின்றன. தங்கள் சுய பலத்தை பரிசோதித்து பார்க்கும் தேர்தலாக எதிர்க் கட்சிகள் இந்த இடைத்தேர்தலைக் கருதின.

பல அரசியல் பார்வையாளர்களின் கருத்துக்கு ஏற்ப எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளே வெளியாகியுள்ளன. எதிர்க் கட்சிகளின் கூட்டணி உத்தரப் பிரதேசத்தைத் தாண்டி மகாராஷ்டிரா, பீஹார் என பல மாநிலங்களிலும் வெற்றிக்கொடி நாட்டியுள்ளது. மக்களவை இடங்களில் நான்கில் இரண்டை பா.ஜ.க. பறி கொடுத்துள்ளது. சட்டப்பேரவை தேர்தலில் ஒன்றில் மட்டுமே வென்றுள்ளது.

அதுவும் உ.பி.யின் கைரானாவும், மகாராஷ்டிராவின் பண்டாரா, கோண்டியா தோல்வியும் பா.ஜ.கவை மிகவும் உலுக்குகின்றன. இந்த இரு தொகுதிகளிலும் பா.ஜ.க. தவிர்த்த அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தன. அதன் கூட்டணிக் கட்சியான சிவசேனாவும் எதிர் அணிக்கு ஆதரவு கரம் நீட்டியது. அனைவரும் ஒன்று சேர்ந்தால் பா.ஜ.கவால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை இந்த கட்சிகள் நிரூபித்துள்ளன.



**காங்கிரஸ் - இந்திரா காந்தி**

இந்தியாவில் தற்போது எழுந்துள்ள சூழ்நிலையை, 1970 –காலகட்டத்தில் இருந்த நிலையுடன் அரசியல் பார்வையாளர்கள் பலரும் ஒப்பிடுகின்றனர்.

அப்போது காங்கிரஸுக்கு எதிராக, அப்போதைய பிரதமர் இந்திராவின் செயல்பாட்டிற்கு எதிராக, அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்தன. சோசலிச கொள்கையில் ஊறியவர்களும், பா.ஜ.கவின் தாய் கட்சியான பாரதிய ஜனசங்கத்து தலைவர்களும் கூட கைகோத்தனர். வெவ்வேறு கொள்கைகள் இருந்தபோதிலும், அரசியல் வேறுபாடுகளைக் கடந்து ஒன்று கூடினர்.

அவர்கள் அனைவரின் ஒட்டுமொத்த இலக்கு என்பது ஒன்று தான். காங்கிரஸை தோற்கடிக்க வேண்டும்; இந்திராவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதுதான். ஜனதா என்ற ஒற்றை மந்திரம் அப்போது காங்கிரஸுக்கும், இந்திரா காந்திக்கும் எதிராக அனைத்து கட்சிகளையும் ஒரணியில் சேர்த்தது.

ஜனநாயகத்திற்கு ஆபத்து என்ற முழக்கத்துடன் ஜெயபிரகாஷ் நாராயணன் தொடங்கிய இயக்கமும், ஜனதாவின் அரசியலுக்கு உரம் ஏற்றியது. இந்திரா காந்தி அறிவித்த நெருக்கடி நிலைக்கு எதிராக நாடுமுழுவதும் கிளர்ச்சிகள் நடந்தன. இந்த அரசியல் போராட்டம் இறுதியில் காங்கிரஸை வீழ்த்தியது. இந்திராவை பதவியில் இருந்து இறக்கியது. ஜனதா ஆட்சி மலர்ந்தது.

1977 ஆம் ஆண்டு நடந்த இந்த தேர்தல் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது; இந்திய வரலாற்றில் முதன்முறையாக காங்கிரஸ் பெரும் தோல்வியைச் சந்தித்தது. ஜனதா அணி 544 இடங்களில், 298 தொகுதிகளில் வென்று சரித்திர சாதனை படைத்தது.

**திரும்பும் வரலாறு**

இந்த வரலாறு மீண்டும் திரும்புவதாக சில அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர். பா.ஜ.கவில் பிரதமர் மோடியின் நிலை, அன்றைய காங்கிரஸில் இந்திரா காந்தி இருந்ததற்கு நிகரானது. பா.ஜ.கவின் தனிப்பெரும் தலைமையாக பிரதமர் மோடி உருவானமையால் எதேச்சதிகாரம் தலைதூக்கி வருவதாக பலரும் கூறுகின்றனர். மோடியே, பா.ஜ.க. என்றாகிவிட்ட பிறகு நிலைமை மாறி விட்டது.

பா.ஜ.கவில் உள்ள மூத்த தலைவர்கள் பலர் தற்போது அந்தக் கட்சியில் இல்லை. அல்லது தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கி விட்டனர்; அல்லது ஒதுக்கப்பட்டு விட்டனர். பா.ஜ.கவின் தீவிர கொள்கை போராளியான சிவசேனா கூட இன்று பிரதமர் மோடியின் தீவிர எதிராளியாகி விட்டது. எதிர்க்கட்சி வரிசையில் உள்ள அனைத்து தலைவர்களுமே பிரதமர் மோடிக்கு எதிராகவும், பா.ஜ.கவுக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு தயாராகி விட்டனர்.

**மோடி எதிர்ப்பு அலை**

எனவே பா.ஜ.கவுக்கு எதிரான அலையை உருவாக்குவதில் எதிர்க்கட்சிகள் வென்று வருகின்றன எனக் கூறப்படுகிறது. அதனை தற்போதைய இடைத்தேர்தல் முடிவுகளும் நிரூபித்துள்ளன.

வரும் 2019 ஆம் ஆண்டு நடைபெறும் மக்களவை பொதுத் தேர்தல் என்பது நெருக்கடி நிலைக்கு பிறகு நடந்த பொதுத் தேர்தலுடன் ஒப்பிட்டு பார்க்கத்தக்கது.

இந்திரா காந்திக்கும், காங்கிரஸுக்கும் எதிராக அப்போது அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒன்று திரண்டமைபோலவே, தற்போது பிரதமர் மோடி மற்றும் பா.ஜ.கவுக்கு எதிராக அனைத்து கட்சிகளும் ஒன்று திரண்டுள்ளன. இந்த எதிர்ப்பு அலை 2019 ஆம் தேர்தலில் சாதிக்க இன்னும் சில தூரம் பயணப்பட வேண்டும்.

# சட்டப்பேரவை இடைத்தேர்தல்: பின்னடைவை சந்தித்த பா.ஜ.க.





இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற 10 சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலுக்கான முடிவுகள், ஆளும் பாரதிய ஜனதா கட்சிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

கேரளா, மகாராஷ்டிரா, மேகாலயா, பிஹார், ஜார்கண்ட், உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட 10 சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்கள் நடத்தப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

அதே போன்று, நாகாலாந்து, உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா மாநிலங்களில் காலியாக இருந்த 4 மக்களவை தொகுதிகளுக்கான தேர்தல் முடிவுகளையும் தேர்தல் ஆணையம் அறிவித்தது.

சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலை பொறுத்தவரை, பிஹார் மாநிலம் ஜோகிஹட் தொகுதியில், ராஷ்டிரிய ஜனதா தளம் வெற்றி பெற்றுள்ளது. மேகாலயாவின் அம்பட்டி தொகுதியில், காங்கிரஸ் கட்சியும், மேற்கு வங்கத்தில் மஹேஷ்தலா தொகுதியில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸும் வெற்றி பெற்றுள்ளது.

இதனிடையே, கர்நாடகா மாநிலம் ஆர்.ஆர். நகரில் பா.ஜ.கவை வீழ்த்தி காங்கிரஸ் வெற்றி பெற்றது.

உத்தரகாண்ட் மாநிலம் தாராலியில் மட்டும் சுமார் 1900 வாக்கு வித்தியாசத்தில் பா.ஜ.க வெற்றி பெற்றது.

10 தொகுதிகளில் ஒரு தொகுதியில் மட்டுமே பா.ஜ.க. வெற்றி பெற்றமை, அக் கட்சிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் கைரானா மக்களவை தொகுதியில், ராஷ்டிரிய லோக் தள கட்சியின் வேட்பாளர் தபசு ஹசன் வெற்றி பெற்றார். சமாஜ் வாதி, பகுஜன் சமாஜ் மற்றும் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் ராஷ்டிரிய லோக் தளம் வெற்றியைக் கைப்பற்றியது.

மகாராஷ்டிர மாநிலம் பன்டாரா கோண்டியா மக் களவை தொகுதியில் தோல்வியைத் தழுவிய பா.ஜ.க, அதே மாநிலத் தில் பால்கர் தொகுதியில் வெற்றிபெற்றது.

(உ)

# வேல்முருகன் மிகவிரைவில் வீரத்தோடு வெளிவருவார்

## கூறுகின்றார் வைகோ

சென்னை, ஜூன் 02

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் மீண்டும் வீரத்தோடு வெளியில் வருவார் என்று, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

தேசதுரோக வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள வேல்முருகன் தொடர்பில் சென்னை, விமானநிலையத்தில் வைத்து செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழக மக்களுக்கு இதே நிலைமை நீடிக்கும் என்றால் ஒருமைப்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படும் . தமிழ் நாட்டின் சொத்துக்கள் எல்லாம் தமிழ்நாட்டிற்கே சொந்தம் என்ற நிலைமை உருவாகும்.

தமிழக அரசு பிரதமர் மோடி சொல்லும் கருத்துக்களைக் கேட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. வேல்முருகன் விரைவில் வெளியே வருவார். –என்றார்.

# லொறி – கார் நேருக்கு நேர் மோதி மகாராஷ்டிராவில் 10 பேர் சாவு





மும்பை, ஜூன் 02

மகாராஷ்டிரா மாநிலம் மும்பைக்கு அருகில் உள்ள யவாத்மால் என்ற பகுதியில் இருக்கும் ஆர்னி என்ற இடத்தில் நேற்றுக் காலை கார் – லொறி நேருக்கு நேர் மோதிய விபத்தில் 10 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர்.

மேலும் 3 பேர் படுகாயங்களுடன் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்து அப்பகுதி பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## பைபேசியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் நகரிலுள்ள புடவைக் கடை ஒன்றில் பணியாற்றும் ஊழியர் ஒருவர், தனது முதலாளியை அழைத்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

முதலாளியின் வீட்டு வாசற்படலையடியில் முதலாளியை இறக்கிவிட்டு நின்றபோது, மோட்டார்சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர், தமக்கு அவரச அழைப்பு ஒன்றை எடுக்கக் கைபேசியைத் தருமாறு புடவைக் கடை முதலாளியிடம் கேட்டுள்ளனர். அவர் தன்னிடம் கைபேசி இல்லை என்று கூறிய மையுடன், ஊழியரைக் கைபேசியை வழங்கி உதவுமாறு கேட்டுள்ளார்.

முதலாளியின் சொல்லைக் கேட்டு ஊழியர் தனது கைபேசியை அந்த இளைஞர்களுக்கு வழங்கியுள்ளார். அதனைப் பெற்ற ஒருவர், அழைப்பு ஒன்றை எடுத்துக் கதைப்பது போன்று பாவனை செய்தவாறு மோட்டார் சைக்கிளின் பின்னிருகையில் ஏற மற்றையவர் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு தப்பித்தனர்.

கைபேசியைப் பறிகொடுத்தவர் நேற்று முன்தினம் இரவே யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். கொள்ளையர்கள் இருவரின் அடையாளங்களையும் அவர் பொலிஸில் தெரிவித்தார்.

துரிதமாகச் செயற்பட்ட யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையச் சிறு குற்றப் பிரிவினர், கொள்ளையர்களின் வீட்டுக்கே சென்றனர். யாழ்ப்பாணம் மடம் வீதியிலுள்ள வீட்டில் இருந்த கொள்ளையர் பொலிஸாரைக் கண்டதும் சட்டைப் பையிலிருந்த கைபேசியை எடுத்துக்கொடுத்தார். அதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரிடம் மீட்கப்பட்ட கைபேசியும் மன்றில் முன்வைக்கப்பட்டது. மற்றொரு சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் எனப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் வி.இராமக்கமலன், எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-7)

## நயினாதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 5 மணி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ் சேவை இடம்பெறும். காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை படகுச் சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான ஆரம்பக் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கோவில் நிர்வாகத்தினர், பிதேச செயலர், திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸார், கடற்படை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

திருவிழா ஆரம்ப நாளான எதிர்வரும் 14 ஆம் திகதியில் இருந்து காலை 5 மணி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்சேவை இடம்பெறும். காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை படகுச்சேவை நடைபெறும்.

நயினாதீவில் இருந்து மாலை நேரப் படகுச் சேவை 6.30 மணிக்கும், குறிகட்டுவானில் இருந்து யாழ். நோக்கி பஸ் சேவை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

படகுச் சேவையில் ஈடுபடவுள்ள படகுகள் அனைத்தும் தரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபின்னரே சேவைக்கு அனுமதி வழங்கப்படும். குறிப்பாக அனைத்துப் பயணிகளும் தற்காப்பு அங்கி அணியப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

விசேடமான தினங்களில் எதிர்வரும் 14 ஆம் திகதி மற்றும் 23 ஆம், 29 ஆம் திகதிகளில் அதிகளவான பஸ் மற்றும் படகுச் சேவைகள் இடம்பெறும். அதேபோன்று சுகாதாரம், நீர்விநியோகம் உட்பட அந்தந்தத் துறை சார்ந்தவர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து படகுச்சேவைக்கான கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. விலை நிர்ணயக் கூட்டம் நடைபெறவுள்ளது. அந்தக் கூட்டத்தில் கட்டண விவரங்கள் தீர்மானிக்கப்படவுள்ளன எனக் கூறப்பட்டது. (ஐ-7)

## கோட்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில்வா ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

இந்த மனு மீதான விசாரணைகளில் இருந்து தாம் விலகிக் கொள்கிறார் என சில தினங்களுக்கு முன்னர் ஜகத் சில்வா குறிப்பிட்டிருந்தமைக்கு அமைய, வேறு நீதிபதியரசர் குழு முன்னிலையில் மீண்டும் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் பொருட்டு மனு இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 100 நாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரித்த திட்டம் அல்ல எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

100 நாள் வேலைத்திட்டம் பகிரங்கமாக அறிவிக்கப்படும் முன்னர் நடைபெற்ற இறுதிப் பேச்சில் பொது வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார் என்றும், அதில் திட்டம் குறித்து வார்த்தை வார்த்தையாகக் கலந்துரையாடினார் எனவும் ஜயம்பதி விக்ரமரத்ன மேலும் கூறினார்.

மாதுளுவாவே சோபித தேரரின் 76ஆவது ஜனன தின நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதி, 100 நாள் வேலைத்திட்டம் குறித்து வெளியிட்ட கருத்து குறித்து ஊடகங்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஜயம்பதி விக்ரமரத்ன இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொது வேட்பாளரைத் தெரிவு செய்யும் முன்னரே 100 நாள் வேலைத்திட்டம் தொடர்பான நிலைப்பாடுகள் காணப்பட்டன. மாதுளுவாவே சோபித தேரர் தலைமையிலான நீதியான சமூகத்துக்கான மக்கள் அமைப்பே முதலில் இந்தத் திட்டத்தை முன்வைத்தது.

மாதுளுவாவே சோபித தேரர் உட்பட அவரது அமைப்பினர் 180 நாள் வேலைத்திட்டங்களை முன்வைத்தனர். ஐக்கிய தேசியக் கட்சி அதனை 100 நாள் வேலைத்திட்டமாகக் குறைத்தது – என்றார். (ஐ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரியோடும் கலந்தாலோசித்தே 100 நாள் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அது எனக்கும் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

100 நாள் வேலைத் திட்டம் உட்பட அரசின் செயற்பாடுகள் பல தனக்குத் தெரியாமல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்துள்ள சர்ச்சைக்குரிய கூற்றுத் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே சுமந்திரன் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்–

ஜனாதிபதிபுதனன்று ஆற்றிய உரையில் இருந்து பல சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஆட்சி மாற்றத்தின்போது அந்த விடயங்களிலே மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டவன் என்ற வகையில் 100 நாள் வேலைத் திட்டம் உருவாக்கப்பட்டது ஜனாதிபதிக்குத் தெரியும் என்று நான் கூறுவேன். அவரோடும் கலந்தாலோசித்துத்தான் அது செய்யப்பட்டது. தேர்தலுக்கு முன்பதாக அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தோடு சேர்த்து அது வெளியிடப்பட்டது. எனவே அப்படியாக நடந்த ஒன்றை இப்போது அதைச் செய்தது யாரென்று தனக்குத் தெரியாது எனச் சொல்வதுமிகவும்வியக்கத்தக்க ஒரு செயல். இது அவர் தனது அரசியல் இயலாமையை வெளிப்படுத்துவது போலவே தென்படு கிறது. இதனால் நாங்கள் எதிர் பார்த்திருக்கும் தீர்வை அடைவது என்பதும் மிக மிகச் சவால் நிறைந்த விடயமாகவே இருக் கும்.

தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களினால் அரசியல் தீர்வு விடயம் சவால் மிக்கதொன்றாக மாறியிருக்கின்ற போதிலும், அரசியல் தீர்வுக்குச் சாத்தியமான அனைத்து வழிவகைகளையும் கூட்டமைப்பு மேற்கொள்ளும்.

புதிய அரசமைப்பு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் இடமளிக்காமல் அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் – என்றார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு ஜே.வி.பி. தனிநபர் பிரேரணை கொண்டுவந்துள்ள நிலையில், அரசியல் தீர்வு விடயத்தில் கூட்டமைப்பு ஏன் தனிநபர் பிரேரணை முன்வைக்கக் கூடாது என அவரிடம் வினவப்பட்டது.

அதற்குப் பதிலளித்த சுமந்திரன், தனிநபர் பிரேரணை ஊடாக அரசமைப்புத் திருத்தச் சட்டவரைவொன்று கொண்டு வந்தால் அது ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாக அமையும். எனவே, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தத் தீர்வையும் முன்வைக்கக் கூட்டமைப்பு தயார் இல்லை– என்று கூறினார். (ஐ)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடாந்தம் நடைபெறும் இந்த இப்தார் நிகழ்வில் இம்முறை அமைச்சர் ரவூப்ஹக்கீம், இராஜாங்க அமைச்சர்களான பௌஸி, ஹிஸ்புல்லாஹ் மற்றும் அதாவுல்லாஹ், பஷீர் சேகு தாவூத், ஹசன் அலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதேவேளை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சவூதி அரேபியா, துருக்கி, ஈரான், பலஸ்தீன் உள்ளிட்ட பல முஸ்லிம் நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களும், முஸ்லிம் தொழிலதிபர்கள் உள்ளிட்ட முஸ்லிம் மக்களும் இந்த இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ். இந்தியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இந்தப் போராட்டம் நடைபெற்றது.

தமிழகம் – தூத்துக்குடி மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களது படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இந்திய மத்திய மற்றும் தமிழக அரசைக் கண்டித்தும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வலியுறுத்தியும் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்க வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'தமிழ் நாட்டு அரசே நீதி கேட்ட மக்களுக்குத் துப்பாக்கி குண்டுகளா?', 'மோடி எடப்பாடி அரசே தூத்துக்குடி கொலையாளிகளுக்குத் தண்டனை என்ன?', 'தூத்துக்குடிக்கு நியாயம் வழங்கு', 'மோடியின் கையில் மக்களின் குருதி', 'மோடி– எடப்பாடி ஆட்சியாளர்களே! கொலையாளிகளுக்கு தண்டனை என்ன?' உள்ளிட்ட பல்வேறு கோஷங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பியிருந்தனர். (ஐ-7)

## மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பாடசாலைகளில்மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றமை தொடர்பான முறைப்பாடுகள் மாவட்ட செயலகத்துக்குகிடைக்கப்பெற்றுள்ளன. அத் தகைய முறைப்பாடுகள் தொடர்பில்சட்டநடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அவ்வாறு மாவட்ட செயலகத்துக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளின் பிரகாரம், யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவினரால் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுப் பொலிஸாரால் தகுந்த சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான தொந்தரவுகள் தொடர்பில் மாணவர்கள் இரகசியமான முறையில் தமது முறைப்பாடுகளை யாழ்.மாவட்ட செயலகத்தில் முறையிடமுடியும்.

பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் உரிய முறையில் முறைப்பாடுகளை மேற்கொண்டால் தகுந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

பாலியல் ரீதியான நொந்தரவுகள் தொடர்பில் முறையிட மாணவர்களும் பெற்றோர்களும் அச்சம் காரணமாக முன்வருவதில்லை. இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் பாடசாலைச் சமூகத்தினரும் மூடி மறைக்க முயல்வதுடன் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை – என்றார். (ஐ-7)

## யமுனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தமருதமுத்துகோவிந்தன் (வயது–27) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டார். அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

யமுனா ஏரியில் கடந்த 19ஆம் திகதி தவில் வித்துவானான முதியவரின் சடலம் மீட்கப்பட்ட நிலையில் நேற்று இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளமை அந்தப் பகுதி மக்கள் இடையே அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளது. (ஐ-7)

## தவறுகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தைத் தொடர்வோம். இதன்படி எஞ்சியுள்ள அடுத்த 18 மாதங்களில் எதிர்பார்த்த துரித அபிவிருத்தியை முன்னெடுப்போம் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிதாக கிராம உத்தியோகத்தர்கள் 1650 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் அபிவிருத்திக்காகக் கிராமத்திற்குநிதியொதுக்கீடுகள் செய்யும்போது கிராம உத்தியோகத்தர்களே அதற்கான உரிய வேலைகளைச் செய்கின்றனர். கிராம உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புமிக்க கடமைகளை இனிமேல் சுமத்தவுள்ளோம். இரண்டு வருடங்கள் நாட்டை உரிய முறையில் கட்டியெழுப்பி விட்டு எஞ்சியுள்ள 18 மாதங்களில் துரித அபிவிருத்தியை முன்னெடுக்கவுள்ளோம்.

நாம் நாட்டைப் பொறுப்பேற்கும்போது நாட்டின் பொருளாதாரம் பெரும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. கல்வித் துறை பாரிய சரிவைச் சந்தித்தது. எமது அரச வருமானத்தின் மூலம் கடனை விடுத்து வட்டியைக்கூடச்செலுத்த முடியாமல் போனது. அந்தளவுக்குப் பொருளாதார ரீதியான சிரமத்தை எதிர்கொண்டோம்.

கடன் தொல்லையிலிருந்து விடுப்பட்டு நிலையான பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்கே நாம் கடந்த இரு வருடங்கள் முயற்சி செய்தோம். பெரும் கஷ்டமான காலத்திலும் கூட வரவு – செலவுத் திட்டத்தை மட்டுப்படுத்தவில்லை.

நாம் சிரமமான பொருளாதாரத்தைப் பொறுப்பேற்று நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்துள்ளோம். வெளிநாட்டு முதலீடு கடந்த வருடம் பன்மடங்காக அதிகரித்தது. அது நடப்பாண்டில் இன்னும் அதிகமாகும். இந்நிலையில் தற்போது கடன்செலுத்தக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கடன் சுமையைக் குறைத்து வருகின்றோம்.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டளவில் அதிகளவில் கடன்செலுத்த வேண்டியுள்ளது. எதிர்வரும் காலத்தில் அபிவிருத்தியில் அவதானம் செலுத்துவோம்.

கல்வித்துறையில் புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். சட்டம் ஒழுங்கைச் சீர்ப்படுத்தவுள்ளோம். நாம் ஆரம்பித்த அபிவிருத்தியைத் தொடர்ந்து கொண்டு செல்லவுள்ளோம். எமது நாட்டின் பொருளாதாரம் வரட்சி, வெள்ளத்தினால் பாதிப்புறும் எனக் கூறினாலும் அவ்வாறு செல்லவிடாமல் நாட்டின் பொருளாதாரத்தைச் சீராக முகாமைத்துவம் செய்துள்ளோம்.

அத்துடன் கிராம வீதி அபிவிருத்திக்கு விசேட அவதானம் செலுத்துவதுடன் கிராமத்தின் குளங்களைப் புனரமைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

நாட்டைக் கட்டியெழுப்புவது இலகுவான காரியமல்ல. எமது வேலைத்திட்டங்களில் ஒரு சில குறைபாடுகள் உள்ளன. எனினும் அவற்றைத் திருத்திக் கொண்டு நாம் பயணிக்கவுள்ளோம். இதன்படி அடுத்த 18 மாத எதிர்பார்த்த துரித அபிவிருத்தியை முன்னெடுப்போம் – என்றார். (ஐ)

# உலகக்கிண்ண உதைபந்துத் தொடரில் மிகப் பெரிய கவர்ச்சிகர வீரர் நெய்மர்



ரஷ்ய உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் மிகப்பெரிய கவர்ச்சிகர வீரர்களில் பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர், முதன்மையானவர் என சக வீரர் டேனிலோ தெரிவித்துள்ளார்.

கழகப் போட்டியின் போது, பாத நீள எலும்புகளில் காயம் ஏற்பட்டதால் தற்போது கடும் பயிற்சியில் நெய்மர் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் அவர் உலகக்கிண்ணத் தொடரில் விளையாடுவது குறித்து டேனிலோ கூறுகையில்,

நான் நெய்மருடன் அடிக்கடி பேசி வருகிறேன். அதுவும் இந்த 10 நாள்களாகப் பயிற்சியில் அவருடன் விளையாடி அவரை எதிர்கொண்டும் விளையாடி வருகிறேன். ஏனெனில் நான் அவருக்கு ஒவ்வொரு முறையும் சவால் ஏற்படுத்துகிறேன், ஒவ்வொரு தினமும் அவர் சிறப்பாகவும் வேகமாகவும் விளையாடி வருகிறார். நாளுக்கு நாள் அவரது ஆட்டத்தில் வேகம் கூடியுள்ளது. அவரைத் தடுத்து பந்தை அவரிடமிருந்து எடுப்பது நாளுக்குநாள் கடினமாக உள்ளது.

ரஷ்ய உலகக்கிண்ணத் தொடரில் மிகப்பெரிய கவர்ச்சிகர வீரர்களில் முதன்மையானவர் நெய்மர். நாளை ஞாயிறன்று குரேஷியாவுக்கு எதிரான நட்பு முறை உதைபந்தாட்டத்தில் நெய்மரின் வேகம், உடல்தகுதி எப்படியுள்ளது என்று தெரிந்துவிடும்.

எனவே உலகக்கிண்ணத்துக்கு அவர் 100 சதவீதம் தகுதியுடன் இல்லாவிட்டாலும் எதிர்பார்ப்புக்கு இணங்க அதற்கு நெருக்கமான உடற்தகுதியில் வருவார். இவரது பங்களிப்பு எங்களுக்கு முக்கியமானது எனக் கூறினார்.



## முகமது சாலா விளையாடுவார்!

எகிப்து உதைபந்தாட்ட அணியின் நம்பிக்கை நட்சத்திரமான முகமது சாலா, எதிர்வரும் உலகக் கிண்ணத் தொடரில் நிச்சயம் விளையாடுவார் அந்நாட்டு உதைபந்தாட்டச் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இது குறித்து எகிப்து உதைபந்தாட்டச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மூன்று வார ஓய்வுக்குப் பின்னர் சாலா முழு உடல்தகுதியுடன் விளையாடத் தயாராகி விடுவார். எனவே, உலகக்கிண்ணத் தொடரில் அவரது பங்களிப்பு நிச்சயமாக இருக்கும் எனக் கூறியுள்ளது.

கடந்த சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரின் ரியல் மட்ரிட் அணிக்கெதிரான இறுதிப் போட்டியில், இங்கிலாந்தின் லிவர்பூல் கால்பந்து கழக அணிக்காக விளையாடிய முகமது சாலா, தோள்பட்டையில் பலத்த காயம் அடைந்து கண்ணீருடன் வெளியேறியிருந்தார்.

இதனால், அவர் எதிர்வரும் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் அவர் விளையாடுவார் என உதைபந்தாட்டச் சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளமையானது இரசிகர்களை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

கடந்த 28 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு, எகிப்து உதைபந்தாட்ட அணி, ரஷ்யாவில் இம்மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் விளையாடத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்ரிட் பயிற்சியாளர் திடீரென இராஜினாமா




உலகின் மிகச்சிறந்த உதைபந்தாட்டக் கழக அணியான ஸ்பெயின் நாட்டின் ரியல் மட்ரிட் கழக அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஷினேடின் ஷிடேன், தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இவரது இந்த திடீர் முடிவு ஒட்டுமொத்தமாக அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ள நிலையில், தனது ஓய்வு குறித்து அவர் கடும் அதிருப்தியிலான பாணியில் சில கருத்துக்களை ஊடகங்களுக்கு பகிர்ந்து கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், பதவியிலிருந்து விலகுவதாக முடிவு செய்துள்ளேன். மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நான் விலகுவது தான் அனைவருக்கும் நல்லது.

இது என்னுடைய முடிவு. நான் தலைமைப் பயிற்சியாளர் பதவியை மேலும் நீடிக்க இருந்தது உண்மை தான். அது என்னுடைய தவறு. அணியில் மாற்றம் தேவைப்படுகிறது. இது தான் சரியான நேரம் என கூறினார்.

பிரான்ஸின் முன்னாள் உதைபந்தாட்ட வீரரான ஷினேடின் ஷிடேன், கடந்த 2016ஆம் ஆண்டு முதல் ரியல் மட்ரிட் கழக அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்து வருகிறார். அவர் பதவியேற்றது முதல் தொடர்ச்சியாக மூன்று சம்பியன்ஸ் கிண்ணங்களை ரியல் மட்ரிட் அணி கைப்பற்றியது. ஆத்தோடு லா லிகா தொடரிலும் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது.

## டிவில்லியர்ஸிடம் கெஞ்சிய பயிற்சியாளர்

டிவில்லியர்ஸிடம் 2019 ஆண்டு உலகக் கிண்ணத் தொடர் வரை விளையாடலாமே என்று கூறியுள்ளார் தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் ஓட்டிஸ் கிப்சன்.

இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் சிறப்பாக விளையாடி, அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்திய தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் திடீரென்று சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.



இவரின் அதிரடி ஆட்டத்தைப் பார்க்க பலரும் காத்துக் கொண்டிருக்கும் வேளையில் ரசிகர்களுக்கும் மட்டுமின்றித் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் தென்னாபிரிக்கா அணியின் பயிற்சியாளர் ஓட்டிஸ் கிப்சன், டிவில்லியர்ஸின் அறிவிப்பு எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஓய்வு அறிவிப்பதற்கு முன்னர் அன்றைய நாள் காலை எனக்கு போனில் கூறினார். அதன் பின் நீண்ட நேரம் பேசினார். நீங்கள் செய்வது இந்த நேரத்தில் சரி தான் என்று நினைக்கிறீர்களா என அழுத்தமாகக் கேட்டேன்.

அவர், நான் எனக்கு உறுதுணையாக இருந்தவர்களிடம் அனைவரிடமும் பேசிவிட்டேன். நான் மிகவும் களைப்படைந்துவிட்டேன் எனக் கூறினார்.

அவர் அறிவிப்பதற்குச் சில நாள்களுக்கு முன்னர் தான் ஐ.பி.எல். தொடரில் ஓர் அற்புதமான ஸ்பைடர் மேன் கட்ச் பிடித்து அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தார்.

அதுமட்டுமின்றி அந்த கட்ச் மூலம் அவர் எப்படி கிரிக்கெட்டை ரசித்து ஆடுகிறார் என்பதையும் பார்க்க முடிந்தது. ஆனால் திடீர் ஓய்வு அதிர்ச்சியைக் கொடுத்தது.

டெஸ்ட் போட்டிகளை விட்டு விட்டு, ஒருநாள் போட்டிகளில் மட்டும் , அதுவும் உலகக்கிண்ணம் வரை மட்டுமே விளையாடலாமே ஏபி என்று கேட்டேன். இறுதியில் அவரது முடிவிலே உள்ளது என்று விட்டுவிட்டேன் என்று கூறியுள்ளார்.

## மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் பணிந்தது உலக பதினொருவர் அணி

புயலால் பாதிக்கப்பட்ட மைதானங்களைச் சீரமைப்பதற்கு, மேற்கிந்திய தீவுகள் அணி மற்றும் உலக பதினொருவர் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட 20/20 போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி 72 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உலக பதினொருவர் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 199 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக எவின் லீவிஸ் 58 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் ராஷித் கான் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து 200 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய உலக பதினொருவர் அணி, 127 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் திசர பெரேரா அணியின் அதிகபட்ச ஓட்டமாக 61 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் கெஸ்ரிக் வில்லியம்ஸ் 3 விக்கெட்டுகளையும், சமுவேல் பத்ரி, ஆந்ரே ரஸல்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்திய தீவுகள் அணி சார்பில், 58 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட எவின் லீவிஸ் தெரிவு செய்யப்பட்டார்.



# யாழ். - ஊர்காவற்றுறை பஸ்கள் நேற்றுச் சேவைப் புறக்கணிப்பு

## பிற்பகலில் வழமை போன்று சேவை

யாழ்ப்பாணம், ஜுன் 02

யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறை தனியார் பஸ் சேவைகள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன. ஆயினும் நேற்றுப் பிற்பகல் அவை மீள ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் மற்றும் பொலிஸ் அதிகாரி வழங்கிய உறுதி மொழியை அடுத்து தமது பணிப்புறக்கணிப்பைக் கைவிட்டு தனியார் பஸ் உரிமையாளர்கள் சேவையை ஆரம்பித்தனர்.

ஊர்காவற்றுறையில் தனியார் பஸ் ஊழியர் ஒருவரைப் பொது மகன் ஒருவர் தாக்கியுள்ளார். அதுதொடர்பில் தனியார் பஸ் ஊழியர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். எனினும் பொலிஸார் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தாக்குதல் நடத்தியவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறை சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் இணையத்தின் தலைவர், யாழ். மாவட்டச் செயலர், யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் ஊர்காவற்றுறை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையே சந்திப்பு இடம் பெற்றது.



தாக்குதல் நடத்தியவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸ் அதிகாரி உறுதி மொழி வழங்கினார்.

அதனை அடுத்து யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறைதனியார்பஸ்சேவைகள் நேற்று பிற்பகல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-7)

# ஹரினின் அர்ப்பணிப்பினால் 2 தேர்தல்களை வென்றோம்

## கூறுகிறார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜுன் 02

அமைச்சர் ஹரின் பெர்ணான்டோவின் அர்ப்பணிப்பால், 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தி அதனை வெற்றிக்கொண்டோம். அதே போல, நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றியீட்டினோம்.

– இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

ஐக்கிய தேசியக் கட்சியின் தகவல்தொடர்பு மற்றும் பிரசார செயலாளராக அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ நேற்று நியமிக்கப்பட்டார். அவருக்கான நியமனக் கடிதம், அலரிமாளிகையில் வைத்து மாலை வழங்கப்பட்டது.

நியமனக்கடிதத்தை வழங்கி உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர்மேலும்உரையாற்றுகையில்–

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிய தலைமைக்கான தலைமுறையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதே போல, கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குப் புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில், மிகவும் பெறுமதிவாய்ந்த பொறுப்பு, ஊடகமாகும். அமைச்சர் ஹரின்பெர்ணான்டோவே, அதற்குத் தகுதிவாய்ந்த நபராவார்–என்றார். (ஐ)







யாழ். பொது நூலக எரிப்பு நாள் நினைவு நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நூலக முன்றிலில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் பலர் பங்கேற்றனர். (ஐ-7)

# ரூபாவின் மதிப்பு மேலும் சரிவு

இலங்கை ரூபாவின் விலை டொலரின் பெறுமதியுடன் ஒப்பிடும் போது நேற்று மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 159.61 ரூபாவாக அதிகரித்துள்ளது.

டொலர் ஒன்றின் விற்பனை விலை அதிகரித்த தன் காரணமாக ரூபாவின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த மே மாதம் 17 ஆம் திகதி டொலர் ஒன்றின் விலை 159.55 ரூபாவாக காணப்பட்டது.

இவ்வருடத்தின் கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் மே மாதம் 17 ஆம் திகதி வரை அமெரிக்க டொலர் ஒன்றின் விலை 3.26 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# முல்லைத்தீவில் கொலை; சந்தேக நபர் கைதாகினார்

முல்லைத்தீவு, ஜுன் 02

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் கடந்த 23ஆம் திகதி வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட கள்ளபாடு வடக்கைச் சேர்ந்த வ.சதாநிசன் என்ற இளைஞனின் படுகொலையுடன் தொடர்புடைய யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த சந்தேகநபரை முல்லைத்தீவுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 23.05.2018 அன்று முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் உள்ள பனங்கூடல் ஒன்றுக்குள் வெட்டிப்படுகொலை செய்யப்பட்ட நிலையில் இந்த இளைஞனின் சடலம் காணப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சட்டவைத்திய அதிகாரி, நீதிபதி ஆகியோர் முன்னிலையில் பொலிஸ் நுண்புலனாய்வு பரிசோதகர்கள் சடலம் காணப்பட்ட இடங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தி உடற்கூற்று பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

அங்கு மருத்துவ அறிக்கையில், கழுத்தில் கூரியஆயுதத்தால் வெட்டப்பட்டு அதிகளவான குருதிபோக்குக் காரணமாக இளைஞர் இறந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தக் கொலையுடன் தொடர்புடையவரை கைதுசெய்வதற்காக முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர் .

இந்நிலையில் உயிரிழந்தவரின் வயிற்றில் வலதுபக்கத்தில் கடிகாயம் ஒன்று காணப்பட்டுள்ளது. இதனை வைத்து முல்லைத்தீவுப் பொலிஸார் ஆராய்வை மேற்கொண்டனர்.

இதன்படி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் மதுபோதையில் தகராறு மற்றும் குடும்பப் பிரச்சினை காரணமாகக் கடித்தார் என ஒருவருக்கு எதிராகப் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

இதனையடுத்து செல்வபுரத்தைச் சேர்ந்த நபரை தேடிய பொலிஸார், அவர் அந்தப் பகுதியில் இல்லாத நிலையில் அவரைக்கண்காணிக்கும்நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அந்த நபர் முல்லைத்தீவுப் பகுதிக்குள் வந்துள்ளமை குறித்து பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இருந்து வட்டுவாகல் பாலம் ஊடாக நடையில் சென்ற அந்தச் சந்தேக நபரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து உயிரிழந்த இளைஞனின் தலைக்கவசம்,பணப்பை மற்றும் கொலைக்காகப் பயன்டுத்தப்பட்ட கத்தி உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர், உயிரிழந்த இளைஞனின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்து யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் உள்ள தனது அக்காவிடம் கடையில் அடகு வைத்துத் தருமாறு கொடுத்துள்ளார். இதனை அடுத்து அவரின் சகோதரியும் கைதாகியுள்ளார். அவரிடம் இருந்து தங்கச் சங்கிலி மீட்கப்பட்டுள்ளது.

இருவரையும் நேற்று முல்லைத்தீவு மாவட்டநீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 04 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ஐ-81)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.